நல்லூர் ...
15-12-1989


# பாதுகாவலன்

PATHUKAVALAN


**வர்ணக்கலண்டர்**

எமது அடுத்த இதழ் கிறிஸ்மஸ் சிறப்பிதழாக 22ஆம் திகதி வெளிவரும். பாதுகாவலன்வர்ணக்கலண்டர் அவ்விதழுடன் சேர்த்துக்கொடுக்கப்படும். வாடிக்கையாளர்கள் பத்திரிகை பெறும்போது உங்கள் சிறப்பிதழில் பாதுகாவலன் வர்ணக்கலண்டர் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள மறந்துவிடாதீர்கள்.

மலர்: 115 இதழ் : 46 15-12-1989 (டிசம்பர். 8 — டிசம்பர்.22 ) ரூபா 1-50— இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

- யாழ்.மறைவட்டத்தின் திருவழிபாட்டுத் தேவைகளை நிறைவுசெய்ய
- இலங்கைத்தமிழ் இறைமக்களுக்குப் பணிபுரிய-புதியதொரு நிலையம்

## இலங்கைத் திருச்சபையின் வளர்ச்சிக்கென

# இன்னுமொரு புதிய நடுநிலையம் ஆரம்பம்

இறைமக்கள் பயனுள்ள முறையில் வழிபாடுகளில் பங்குகொள்ள உதவும் முகமாக யாழ். மறைவட்டத்தில் வழிபாட்டு நிலையம் திறக்கப்பட்டுள்ளது இலங்கைத் தமிழ் மக்களின் தனித்துவ மரபுகளை வழிபாட்டில் புகுத்துவதற்கும், மக்களின் தேவைகளை அறிந்து செயற்படுவதற்கும் மேலுமொரு சந்தர்ப்பம் உருவாகியுள்ளது- யாழ். திருச்சபையும், இலங்கைத் திருச்சபையும் வளர்ச்சியடைவதை அண்மைக் காலங்களில் உருவாகியுள்ள மறைக்கல்வி நடுநிலையம், மனித முன்னேற்ற நடுநிலையம், நற்செய்திப் பணியகம்,கலாச்சார நடுநிலையம், வழிபாட்டு நடுநிலையம் என்பன எண்பிக்கின்றன.

யாழ். மறைவட்ட திருவழிபாட்டு பணிநிலையம் 9-ம்திகதி சனிக்கிழமை காலை யாழ். ஆயர் பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

புதிய நடுநிலையத்தின் இயக்குநரான அருட்திரு. ஜே. நீக்கிலஸ் அடிகள் '' இது இன்று ஒரு தனிநிலையமாக இயங்கத் தொடங்கினாலும் 1974-ல் இருந்து மறைக்கல்வி நிலையத்தின் ஒரு அங்கமாக யாழ். மறைவட்டத்தில் இது வரைகாலமும் இயங்கிவந்துள்ளது. இப்புதிய நிலையத்தின் பணிகளாக திருவழிபாட்டுப் பாடல்களை அச்சிடல், திருவழிபாடுகளுக்கு விளக்கவுரை அளித்தல், ஞாயிறு திருப்பலி வாசகங்களை அச்சிட்டு விநியோகித்தல், திருச்சடங்கு நூல்களை வெளியிடுதல், பாடல்களை ஒலிப்பதிவுநாடாக்களில் வெளியிடுதல், திருவழிபாட்டுக் குழுக்களைப் பங்கு ரீதியாக ஊக்குவித்தல் போன்ற வேலைகள் அமையவுள்ளன'' என தமது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

யாழ். ஆயர் தமது உரையில் ''இலங்கை ஆயர் மன்றம் திருவழிபாடு – கலாச்சார ஆணைக்குழு ஒன்றை இப்போது ஆரம்பித்திருக்கின்ற காரணத்தினால் மறைவட்டத்திலும் இவ்வழிபாட்டு நடு நிலையம் அவசியம் தேவைப்படுகிறது'' என்று குறிப்பிட்டார்

இப்புதிய நிலையம் யாழ். மறைக்கல்வி நிலையம் அமைந்துள்ள கட்டிடத்தில் ஒரு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.



மன்னார் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வத்திக்கானில் திருத்தந்தையைச் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம். இச்சந்திப்பின்போது '' மன்னார் வேதசாட்சிகளின் சரித்திரம் '' முத்திப் பேறுபெற்ற பட்டத்திற்கு ஆதாரமாகத் திருத்தந்தையிடம் கையளிக்கப்பட்டது.

(ஜூலை 4-ல் நடந்த சந்திப்புப்பற்றிய படம்,இவ்வாரமே எமது அலுவலகத்திற்குக் கிடைத்தது)

## வறுமை ஒருவகையான செல்வம்

### அன்னை திரேசா ரைம்ஸ்க்கு அளித்த பேட்டி

ரைம்ஸ் சஞ்சிகை நிருபர் கல்கத்தாவிலுள்ள அன்னை திரேசாவை சென்ற வாரம் பேட்டி கண்டுள்ளார். வாசகர்கள் நன்மை கருதி நாம் அதை இங்கு மொழிபெயர்த்துத் தருகிறோம்.

கேள்வி : நீங்கள் என்ன செய்தீர்கள்?

விடை : செபித்தேன்.

கேள்வி : என்னநேரம் தொடங்கி ?

விடை : நாலரைமணி.

கேள்வி : செபத்திற்குப் பின் ?

விடை ! எமது பணியை யேசுவோடு, யேசுவுக்காக, யேசுவுக்கு செய்வதன் மூலம் வேலைநேரத்திலும் நாம் செபிக்க முயல்கிறோம். எமது வேலையை முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும் செய்வதற்கு இது உதவி செய்கின்றது. மரணத்தறுவாயில் உள்ளோர், அங்கவீனர், மனநோயாளர், புறக்கணிக்கப்பட்டோர், அன்பற்றோர் இவர்கள் அனைவரும் மாறுவேடம் பூண்ட இயேசுவே.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## கடன்திருநாள்

கடன்திருநாள் மாற்றம் பற்றிய எமது சென்ற இதழ் செய்தி இப்போது இலங்கைத் திருச்சபையில் ஞாயிறு தவிர்ந்த கடன்திருநாட்கள் நான்கு மட்டும் தான் என்பதை உணர்த்தியிருக்கும் என எண்ணுகிறோம்.

ஆண்டவரின் திருக்காட்சி, ஆண்டவரின் விண்ணேற்றம் ஆகிய இரு தினங்களும், ஞாயிறு தினங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதால் இப்போது இலங்கைத் திருச்சபையில் உள்ள கடன் திருநாட்கள் ஜனவரி 1, ஆகஸ்டு 15, டிசம்பர் 8, டிசம்பர் 25 ஆகிய நான்குமே. ஞாயிறு தினங்களின் முக்கியத்துவமும், மற்றைய சிறப்புத்தினங்களின் முக்கியத்துவமும் சொல்லாமலே விளங்கும்.



## புதிய சுரூபம்

கொழும்பு மாளிகாவத்தையில் 40 லட்சம் ரூபா செலவில் ஒரு புதிய ஆலயம் நிர்மாணிக்கப்படுகிறது. சென்ற வாரம் மாளிகாவத்தையில் சமாதானத்தின் இராக்கினியான தேவதாயாரின் திருச்சுரூபம் பேரருள்திரு ஓஸ்வல்ட் கோமஸ் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள அதி உயர்ந்த சுரூபம் என வர்ணிக்கப்படும் சமாதானத்தின் அரசியின் இச்சுரூபம் 16 அடி உயரமானது. இலங்கை மக்களின் சுதேச பண்புகள், சிற்ப, ஓவியங்கள் இச்சுரூபத்திலுள்ளதாக வர்ணிக்கப்படுகின்றது,

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம் கருத்து

### கட்டுப்பாடுகள்

திருச்சபையில் இப்போது கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வருகின்றன என்று முறைப்பாடு கூறுகின்றவர்களுக்கு எமது சென்ற இதழில் கடன் திருநாள் பற்றி வெளிவந்த செய்தி சாதகமாக அமைந்திருக்கும்.

தாமும் குழம்பி, மற்றவர்களையும் குழப்புகின்ற இத்தகையோரின் மன உணர்வை நாம் ஓரளவுக்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

திருச்சபையில் அவ்வப்போது பல மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன. விசுவாச ஒளியில், மக்களின் நன்மை கருதி பயனுள்ள பல மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன.

அகில உலக திருச்சபையிலும் ஞாயிறுதினங்கள் உட்பட ஆவணி 15, மார்கழி 8 மார்கழி 25 என்பன கடன் திருநாட்களாக அனுசரிக்கப்படுகின்றன. திருக்காட்சி விழா, விண்ணேற்ற விழா என்பவற்றை குறித்த தினத்திலோ அல்லது அதன் பின்வரும் ஞாயிறு தினத்திலோ கொண்டாட தளத்திருச்சபை ஆயர்களுக்கு தாய்த் திருச்சபை பூரண அதிகாரங்களையும் வழங்கியுள்ளது.

சில ஆயர் மன்றங்கள் வேறு பல திருநாட்களை தமது மக்களுக்கு கடன்திருநாட்களாக அமைத்துள்ளன. உதாரணமாக ஐரோப்பாவில் சகல புனிதர்கள் தினம் கடன் திருநாளாக அனுசரிக்கப்படுகிறது.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை ஆயர் மன்றம் திருக்காட்சி விழாவை கடன் திருநாளாக அறிவித்து அது தை மாதம் 6ம் திகதி கொண்டாடப்பட வேண்டும் என தெரிவித்தது. மூவிராசாக்கள் தினம் கீழைத்தேய நாடுகளுக்கு முக்கியமான தினமாகும். இறைவன் தம்மை முதல்முதலாக புறவினத்தாருக்கு வெளிப்படுத்தியதால் அதை எமக்கே வெளிப்படுத்தியதாகக் கொண்டு நாம் அதைப் பெருவிழாவாகக் கொண்டாட வேண்டுமென எமது ஆயர்கள் அறிவித்தனர். அவ்வாறே அது அனுசரிக்கப்பட்டு வந்தது.

ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும் முழுத்திருப்பலியில் பங்குபற்றுவது திருச்சபையின் கட்டளைகளில் ஒன்று. ஞாயிறு திருப்பலியைப் பெரும்பாலான கத்தோலிக்கர் தவறுவதில்லை. ஆனால் திருக்காட்சிவிழா, ஆண்டவரின் விண்ணேற்ற விழா என்பன கிழமை நாட்களில் வருகிறபொழுது, அவற்றின் முக்கியத்துவத்தை உணராதிருப்பது ஒருபுறமிருக்க அரசாங்க, வங்கி, வர்த்தக ஊழியர்கள், மாணவர்கள் தமது அன்றாடக் கடமைகளுக்குச் செல்லுகின்ற காரணத்தால், கடன்திருநாள் கடமையை நிறைவேற்ற முடியாத இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்.

தகுந்த காரணம் இருப்பின், கடன் திருநாள் திருப்பலியில் சமூகம் கொடுக்கத் தவறுவது பாவமாகாது என்கின்ற கருத்தைக் கொண்டிருப்பவர்கள், பழக்க தோசத்தின் காரணமாக காலப்போக்கில், கடன் திருநாளை அனுசரியாது விடுவதே பாவம் இல்லை என்ற மழுங்கடிக்கப்பட்ட மனச்சாட்சியை உருவாக்க முடியும்.

பாவப்பழக்கம் பாவத்தின் கனகனத்தை மனிதர் உணராதவர்களாக வாழக் காரணமாகின்றது. மனச்சாட்சியை மழுங்கடிக்கிறது. குற்றமே இல்லை என்ற உணர்வை வளர்த்துக்கொள்ள தூண்டுகோலாக அது மாறிவிடுகிறது.

எனவே, கடன் திருநாள் பற்றிய உணர்வும் மாறுபடவும், கனகனம் உணராது போகவும், எமது நாட்டில் அண்மைக்காலத்தில் கொண்டாடப்பட்ட திருக்காட்சி விழா, விண்ணேற்ற விழா என்பன காரணமாக அமைந்துவிடக்கூடாது என்பதாலும் மக்களின் நன்மை கருதியும் ஆயர் மன்றம் இம்மாற்றத்தை இப்பொழுது கொண்டுவந்துள்ளதாக விளக்கம் கொடுக்க முடியும்.

கடன் திருநாட்கள் மாற்றத்தால் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றன என்ற தீர்மானத்துக்கு வருவதை விடுத்து, நல்ல மனச்சாட்சியை வளர்க்க மக்களுக்குத் தூண்டுகோலாக நாம் செயற்பட முனைவோம்.

## தேவ உணவு

### திருவருகைக்காலம் 2-ம் ஞாயிறு (10-12-89)

### அமைதியின் திறவுகோல்

கலைமான் நீரோடைகளுக்காக ஏங்குவது போலவும், காதலர் நீண்டபிரிவின் போது அன்புக்காக ஏங்குவது போலவும் மனித இதயங்கள் அனைத்தும் அமைதிக்காக ஏங்குகின்றன ஏக்கம் பிரிவில்தான் உதயமாகின்றது. பிரிவு துன்பத்தைத்தருகிறது. துன்பத்தில் வாழ்வு மடிகிறது.

சாலமோன் மன்னனின் இறப்பைத் தொடர்ந்து, அவனது அரசு இரண்டாகப் பிளந்தது. இஸ்ரவேல், யூதா எனத் துண்டிக்கப்பட்ட அரசின் மக்கள் துன்பத்தில் மடிந்து கொண்டிருந்தனர். பிரிந்தவர் கூடுவர், முறிந்த மரமும் தளிர்விடும் என்று முன்கூட்டியே அமைதிக்கு வழியுண்டு, திறவு கோல் உண்டு என்ற நம்பிக்கையின் செய்தியை நவின்றார் இசையாஸ் இறைவாக்கினர்.

செம்மறியும் - ஓநாயும், கன்றும் - சிங்கமும், வெள்ளாடும் - சிறுத்தைப் புலியும், பால்குடிக் குழந்தையும் - விரியன் பாம்பும் ஒன்றாகக் கூடி, விளையாடி, ஒன்றிப்பில் திளைப்பதும் அமைதியின் உருவகங்கள். உறவுகளின் இணைப்பில் உருவாகும் அமைதிதான் மெசியா தரும் மெய்யான அமைதி என்கிறார் இறைவாக்கினர்.

அமைதியின் வழியைத் திறந்து வைத்த இறுதி இறைவாக்கினரான ஸ்நாபக அருளப்பர் தம் போதனையாலும், வாழ்வாலும், செயலாலும் உடைந்த உறவுகளை மீண்டும் புதுப்பித்தார். சடங்குகள், சட்டங்கள் போன்ற முகமூடிகளுக்குள் தம் பாவங்களை மறைத்து வைத்து, இறை மனித உறவுகளைக் கூறுபோட்டு வாழ்வதே தம் கலையாகக் கொண்ட பரிசேயர், சதுசேயரைக் கண்டித்தார்.

இன்றும் பிரிவினை, பகைமை, கோபம், சச்சரவுகளை வளர்த்துக் கொண்டு கிறிஸ்மஸ் விழாவுக்கு எம்மை எப்படி ஆயத்தம் செய்வது? அமைதியின் அண்ணலை எப்படி சந்திப்பது? அமைதியின் திறவுகோல் என்பது உடைந்த உறவுகளை மீண்டும் இணைத்துக் கொள்வதே. மன - மாற்றமே அந்த ஒப்புரவின் தூண்டுகோல். எம் சொல், செயல், முயற்சிகள் அனைத்தும் உறவுகளை இணைக்கும் பாலங்களாகட்டும்.

### திருவருகைக்காலம் 3ஆம் ஞாயிறு (17-12-89)

### அமைதிக்குப் பங்காளர் அவசியம்

திடீரென ஏற்பட்ட குண்டு வெடிப்பில் அதிர்ச்சியடைந்த பலரும் பதறி ஓடினர், சிலர் படுகாயமுற்றனர். பின்னர் விபத்து நடந்த இடத்திற்கு நூற்றுக் கணக்கில் மக்கள் வெள்ளம் விரைந்தது ஏன் அந்த வெள்ளம் திரண்டது? அதில் பெரும் பகுதி வேடிக்கைப் பிரியர்கள். விநோதக் காட்சி ரசிகர்கள்.

அமைதி ஊர்வலத்தில் (இல்லை போராட்டத்தில்) எத்தனை, எத்தனை பார்வையாளர். சுயநலக் கும்பல் பெரும் பகுதி. புனிதமான அமைதி நடவடிக்கைகளுக்குள் பட்டம், பதவி, அதிகாரம் என்ற சுயநலக் கிருமிகள் பாலை நஞ்சாக்குகின்றன.

திருமுழுக்கு அருளப்பர் சிறையிடப்பட்டார், சிரச்சேதம் செய்யப்பட்டார். அவை எதற்காக? உண்மையிலும், நியாய நடத்தையிலும் தான் அமைதி காக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தமையினால். நாணலைப்போன்று கொள்கைப்பிடிப்பற்ற, மெல்லிய உடை விரும்பும் பகட்டும், பதவியும் தேடிய சுயநலவாதியல்ல அவர். மீட்பிற்கு வேறு என்ன பங்களிப்பை அவர் செய்ய முடியும். புகழுடன் தோன்றியவர் அல்லவா! மெசியா யார் என்று அறிய விரும்பிய அருளப்பரின் சீடர்களுக்கு, விளம்பரம் தேவையில்லை நடப்பதைப் பாருங்கள் என்று தம் செயல்களையே சவால்களாகத் தொடுக்கிறார் இயேசு. நோயாளர், நலிவுற்றோர், ஏழைகள் மத்தியில் தம் பணியை வடித்து அமைதிக்கு அணிதிரட்டினார். அதைப் பாருங்கள் என்று சொன்னார். இயேசுவின் பங்களிப்பு மரணம் வரையும், ஏன் அதைக் கடந்தும் சென்றது.

இயேசுவின் பாதையை விநோதப் பிரியர்களாகவல்லை; சிலுவை சுமக்கும் பங்காளர்களாகத் தொடர அழைக்கிறார். இன்று வன்செயல்களால் பாதிக்கப்பட்டு உடலாலும், உள்ளத்தாலும் நலிவுற்றோர் பலர். உயிர்களை, உடமைகளைப் பறிகொடுத்து பரிதவிக்கும் உள்ளங்கள் பல. பகைமை, பழி, கயமை, கசப்பு உணர்வுகளால் மனம் புண்படுவோர் பலர். இவர்கள் மத்தியில் இயேசுவின் சீடர்கள் எங்கே? பணத்திலும் பார்க்க அன்பை, கரிசனையை, மன்னிப்பை, நட்பைப் பகிர பங்காளர் பலர் தேவை.

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

## விவிலிய வழிபாடு

(திருவருகைக்காலம் 2ஆம் வாரம்

திருச்சபையின் திருவழிபாட்டுக் காலச்சக்கரத்தில் திருவருகைக்காலத்தின் இரண்டாம் வாரத்தில் நாம் இருக்கின்றோம். கிறிஸ்தவ வாழ்வில் இது ஒரு முக்கிய காலகட்டமாகவுள்ளது. இக்காலத்தில் எம்மை நாம் தயார்செய்ய இறைவனிடம் மன்னிப்புக் கேட்போம்.

பாடல்: கருணைத் தெய்வமே கண்பாரும்.

முதல்வர்: அன்பே கடவுள். தன் அன்பின் நிறைவிலே மனிதனைப் படைத்துப் பரிசுத்தமான, பாக்கியமான நிலையில் வாழவைத்தார். மனிதன் தன் தனி உரிமையை நிலைநாட்ட விரும்பி இறைவனை விட்டுப்பிரிந்து சென்றான். இறை உறவை முறித்துவிட்டான். தன்னைவிட்டுப் பிரிந்து தனிமையில் சென்ற மனிதனைக் கைவிட இறைவன் விரும்பவில்லை. அவன்மேல் அன்புகூர்ந்தார். மீட்பரை அனுப்புவதாக வாக்களித்தார். அம்மீட்பரை எதிர்கொள்ள இஸ்ராயேல் இனம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆயத்தப்படுத்தப்பட்டது, அவ்வேளை மெசியாவின் காலம் எப்படிப்பட்டதாக இருக்கும் என இசையாஸ் இறைவாக்கினர் முன்னுரைத்தார். அவ்வாக்கைக் கேட்போம்.

வாசகம்: இசை. 11;1—10

சங்கீதம்; இறைவா! எம்மை மீட்க எழுந்து வாரும். (சங்கீதம் 66)

முதல்வர்: கிறிஸ்துவின் ஆட்சி–அமைதியின் ஆட்சி–நீதியின் உண்மையின் ஆட்சி அங்கே கொடுமையில்லை, கொலையில்லை, பழிவாங்கலில்லை. இன்று அந்த அமைதியின் அன்பின் அரசு வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். சமாதானமும், சகோதரத்துவமும் எங்கும் வளரவேண்டும் என்று ஏங்குகிறோம், நாம் விரும்பும் அன்பின் அரசு வரவேண்டுமாயில் முதலில் எம்மில் அண்ணல் இயேசுவின் அன்பின் ஆட்சி மலரவேண்டும். அதற்கு நாம எம்முள்ளத்தைத் தயார் செய்யவேண்டும். புனித திருமுழுக்கு அருளப்பர் வாயிலாக, இறைவன் எம் உள்ளத்தைச் சீராக்க அழைக்கிறார். அவர் அழைப்பைக் கேட்போம்.

நற்செய்தி: மத். 3;1-12.

முதல்வர்: கிறிஸ்துவின் பிறப்பு விழாவிற்கு ஆயத்தம் செய்யும் காலம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு எம்மைத் தயார் செய்ய நினைவூட்டும் காலம் ''நற்கனி கொடாத மரங்களெல்லாம் வெட்டுண்டு தீயில் போடப்படும்'' திருமுழுக்கு அருளப்பரின் எச்சரிக்கை எம்மை அழைக்கிறது. மனமாற்றத்திற்கு இறைவன் எம்முள்ளத்தில் பிறக்க, கிறிஸ்தவ மதிப்பீடுகள் வளர உளமாற்றம் அடைவோம்.

இ. ம. ஜெயசீலன்

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்




### 13. திராஜனின் பிடியில்...

கி. பி. 98இல்
உரோமையப் பேரரசு
திராஜனின் கைகளிலும்,
சிலுவை...
வாள்...
கொல்லும் விலங்குக் கொடூரங்கள்
கிறிஸ்தவர்களின் தலைகளிலுமாய்
வந்து விடிந்தன.
ஆட்சியின் இரண்டாம் ஆண்டிலேயே
உத்தியோக பூர்வமற்ற குழுக்களுக்கெதிராகவும்
கி. பி. 103இல்
நேரடியாகக் கிறிஸ்தவர்க்கெதிராகவும்
அவன்
வன்முறையைக் கட்டவிழ்த்தான்.
நீரோவின் காலத்தில் பற்றி
தொமிசியன் காலத்தில் வளர்ந்து
பின்பு சிறிது தணிந்து
நீறு பூத்துக் கிடந்த நெருப்பை
திராஜன் மீண்டும் ஊதி விட்டான்.
கி. பி. 110 இல் அவன் விடுத்த அறிக்கையில்
“கிறிஸ்தவனாயிருப்பது சட்டவிரோதம்” என்ற
நீரோவின் சட்டம் உறுதி செய்யப்பட்டது.
அத்தால்,
மறுதலிக்க மறுப்போர்க்கு,
கொடும் வாதை...
மரணம்...
நாடு கடத்தல்
கட்டாய உழைப்பு...
என்பன தண்டனைகளாய் விதிக்கப்பட்டன.
ஆயினும்,
மாநில ஆளுநர்களும், நீதிபதிகளும்
கிறிஸ்தவர் மேல் இரக்கம் காட்டினர்.
மறுதலிக்கும் சிறு செயலே மன்னனுக்குப் போதுமென்றனர்.
பாவம்
“பசித்தாலும் புலி புல் தின்னாது” என அறியார்கள் போலும்
வழமைபோலவே
இக்கலாடனையிலும்
பல செம்மறிகள் வேதசாட்சிகளாய் மரணமெய்தின,
புனித இஞ்ஞாசியார்.
அந்தியோக்கு நகர ஆயர்,
ஆதித் திருச்சபையில்
பெரும் மதிப்புப்பெற்ற பல கடிதங்களைப் படைத்தவர்,
கி. பி. 107இல் கைதானார்.
இரு துணையாளருடனும் வேறும் பலருடனும்
அரச குடும்பமும்
மற்றும் பெருங்குடிமக்களும் பார்த்துக் களிப்படைய
பெருவிருந்தொன்றில்
மிருகங்களுக்கு இரையாக்கப்பட்டார்.
“விலங்குகளின் உணவாக என்னை அனுமதியுங்கள்,
அவற்றின் மூலம் தான் நான் ஆண்டவனை அடைய முடியும்.
நான் கடவுளின் தானியம்.
விலங்குகளின் பற்கள் என்னை அரைத்தால்தான்
நான் இயேசுவுக்குரிய தூய அப்பமாவேன்”
இவை அப்புனிதரின் புகழ்பெற்ற வாக்குகள்.
இதே கலாபனையில்,
தமது வயது முதிர்ந்த பருவத்தில்
கைதாகிக் கொலையான இன்னுமொருவர் புனித சிமியோன்,
இவர் யாகப்பரின் பின் யெருசலேமின் ஆயரானார்.
தாவீதின் மரபில் தோன்றியவராயுமிருந்தார்.
கி. பி. 107இலே,
சில பேதகர்களால்
கிறிஸ்தவரென்றும்
யெருசலம் அரசின் வழித்தோன்றல் என்றும்
காட்டிக்கொடுக்கப்பட்டார்.
மரத்தை வெட்டும் உரோமையர்
வேரை விடுவார்களா?
அரச வாரிசுகளை அழித்தால்தானே
சாம்ராட்சியம் சரியாதிருக்கும்,
பலவித வாதனைகள் செய்து
சிலுவையிலறைந்து
அவர்கள் அவரைக் கொன்று போட்டனர்.
சிறிது பின்னர்,
வினை விதைத்த பேதகரும் வினையறுத்தனர்.
அவர்களும் தாவீதின் குடும்பத்தினர் என அடையாளங் காணப்பட்டு
அதே கதிக்கு ஆளாக்கப்பட்டனர்.
இவர்களுடன் புனித கிளமென்றும்
இன்னும் பலரும் கொல்லப்பட்டனர்.
திராஜனின் ஆட்சி கி. பி. 117 இல் முடிந்தது.

சந்திரன்.

## இறைவன் அழைத்த அருட்திரு சந்தி அடிகள்



“கொடிய நோயின் வேதனை மத்தியில், மரணத்தறுவாயிலும் மலர்ந்த முகத்துடன் சாவை அரவணைத்துக் கொண்டவர் அருட்திரு. கிங்ஸலி புறூனோ சந்தியாப்பிள்ளை அடிகள். அவர் உயிர்த்தெழும் நம்பிக்கையில் உறுதியும், மறு உலக வாழ்வில் திருப்தியும் கொண்டிருந்ததே அந்த மலர்ச்சிக்குக் காரணம் எனலாம்”

நவம்பர் 29 ஆம் திகதி இறைவனடி சேர்ந்த அருட்திரு. K. B. சந்தியாப்பிள்ளை அடிகளின் ஆன்ம சாந்தி வேண்டி நவாலி புனித பேதுரு பாவிலு ஆலயத்தில் சென்ற வெள்ளக்கிழமை காலை ஒப்புக்கொடுக்கப்பட்ட இரங்கற்பலி வேளையில் அருட்திரு ஜேம்ஸ் பத்திநாதர் அடிகள் தமது இரங்கலுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஆயர் இல்ல சிற்றாலயம், ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை ஆலயம், நவாலி பேதுரு பாவிலு ஆலயம், யாழ் பேராலயம் ஆகிய நான்கு ஆலயங்களின் நடுவில், மலர் வளையங்கள் மத்தியில் தந்தையின் பூதவுடல் இறுதியஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

“கடந்த ஒரு வருடகாலமாக நவாலி, ஆனைக்கோட்டைப் பங்குகளைப் பொறுப்பேற்று வழிநடாத்திய அடிகளார், பங்கு மக்களின் சமய, சமூக, பொருளாதார வளர்ச்சிக்காக வெளி ஆரவாரமில்லாத வகையில் நிறைந்த பணி புரிந்துள்ளார். மிகக் குறுகிய காலம் இப்பங்குகளில் இறை பணியாற்றிய இவர் நீண்ட காலம் மக்கள் மனதில் பதியக் கூடிய இனியபண்புகள் படைத்தவராக விளங்கினார். எடபொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருளின் மெய்ப்பொருளைத் தாமே கண்டு நிதானமாக முடிவெடுக்கும் தன்மை; எச்சந்தர்ப்பத்திலும் மற்றவர் மனதைப் புண்படுத்தாது உரையாடும் மென்மை; அடுத்தவரின் ஆற்றல், திறமைகளை நன்குணர்ந்து அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கும் சமத்துவப் பண்பு; ஆகிடவையெல்லாம் அவரது நற்குணங்களுக்கு எடுததுக் காட்டு.

மாலை 3-30 மணிக்கு யாழ். ஆயர், மன்னார் மறைமாவட்டக்குருமுதல்வர் அறுபதுக்கும் மேற்பட்டகுருக்கள் திருப்பலி முடிவில் அடிகளாரின் பூதவுடல் ஆலயத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டபோது, மக்கள் அனைவரும் விம்மி வெடித்துக் கண்ணீர் சிந்திய காட்சி, அருட்தந்தைக்கென ஒரு தனியிடம் இதயங்களில் ஒதுக்கப்பட்டு விட்டது என்பதற்குச்சாட்சியாய் அமைந்தது.

அன்னாரின் ஆன்மா இறைவன் திருவடியில் அமைதியடைவதாக.

சிறில் சுகந்தரன்
நவாலியூர்.

### மாசில்லா மரித்தாயே!

விண்மீனைக் குடையாக்கி,
தண்மீனைக் காலாக்கி,
விண்பரனைச் சேயாக்கி
மண்மீனைக் கண்ணாக்கி
வாழ்வளிக்க வந்தபரன்
தாழ் பணிய வந்தவளே!
தோள்பணிந்து வாழ்த்துகிறோம்,
நீள் அருள் தாய்மரியே!

அன்னைமரி என்றும்,
அமலித்தாய் என்றும்
சொல்லும் மக்களுக்கு
துயர் துடைக்கும் தூயவளே!
தூயநின் திருமகனின்
நேயவழி நாம் நடக்க
துணை நின்று காத்திடுவாய்
தூய அருட் தாய் மரியே!

பாவிகள் எமை மீட்க
பரமனின் தாயாக
இறைவனின் சித்தத்தை
எமக்காக ஏற்றவளே!
இருள் வழி அகற்றி நாம்
அருள் வழி நடந்திட
ஆசிபல பொழிந்திடுவாய்
அருள் அமலித் தாய் மரியே!

ஆண்டவனின் அடிமை என்று
அன்று நீ சொன்னதினால்
மாண்ட மனிதர்கள் நாம்
மகிழ்வான வாழ்வுபெற்றோம்.
மீண்ட திரு வாழ்வதனை
மீட்பருக்காய் வாழ்ந்திடவே
மாசில்லா மரித்தாயே!
மனிதரைக் காத்தருள் மரியே!

V M. டபரேரா
அரிப்புத்துறை.

## கலைநிலா

### நீ ஒரு பாறை

(நாட்டுக்கூத்து)

‘நாட்டுக் கூத்து’ தமிழ் மக்களின் ஓர் அழிக்கமுடியாத பாரம்பரியக் கலை என்பது யாவரும் அறிந்ததே. ஆயினும் பற்பல காரணங்களால் சிதைந்து, அழிந்து போகும் காலகட்டத்திலிருந்து இக்கலைக்குப் புத்துயிர் கொடுத்துப் புதுப்பொலிவு ஊட்டித் தமிழ் பேசும் மக்களிடையே கலை ஆர்வத்தை வளர்க்கும் நோக்குடன் ஆக்கபூர்வமான பணிகளைச் செய்து அரும்பாடுபட்டு வரும் திருமறைக் கலாமன்றத்தினரின் முயற்சிகளை நாட்டுக் கூத்துக்கலை ஆர்வமுள்ள எவரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவது தான் சடந்த 29-11-89 புதன் மாலை யாழ். மறைக்கல்வி மண்டபத்தில் நடைபெற்ற தேம்பாவணி விழா அறிவுப் போட்டியைத் தொடர்ந்து நடைபெற்ற ‘நீ ஒரு பாறை’ நாட்டுக்கூத்து. மூன்று மணி நேரம் நீடிக்கும் இந்த நாட்டுக்கூத்தைச் சுருக்கமான முறையில் புனித பேதுரு வானவரின் வாழ்க்கையின் முக்கிய கட்டத்தை மட்டும் அரை மணி நேரத்தில் மிக அழகாகச் சித்தரித்துக் காட்டியது, இதன் நெறியாளரின் கலைத்திறனே.

ஆம்! வடபகுதியில் வாழும் தமிழ் மக்கள் மட்டுமல்ல தென்பகுதியில் பரவலாகச் செறிந்து வாழும் தமிழ் மக்களும் கூட இந்த நாட்டுக் கூத்தின் முழு அம்சத்தையும் மிக விரைவில் கண்டுரசிக்கக் காத்துக் கொண்டிருப்பதாக அறிகிறோம். எதிர்கால சூழ்நிலையைப் பொறுத்து இந்த நாட்டுக் கூத்தை நாட்டின் பல பாகங்களிற்கும் கொண்டு சென்று கலாமன்றத்தினர் கலையைப் பரப்பி ஆர்வத்தை வளர்ப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இதற்குத் தமிழ் மக்களின் பூரண ஒத்துழைப்பும், ஆதரவும் மிகச் சிறந்த முறையில் என்றுமே கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறதாக அறிகிறோம்.

வாழ்க தமிழ்ப் பணி!
வளர்க கலை ஆக்கம்!

ஆர். எல். சேவியர்

இயக்குநரின் ஆசிச்செய்தி

# உறுதி தரும் வார்த்தை

வேதாகம வாரத்தை திருச்சபை கொண்டாடுவதன் நோக்கம் யாதெனில் இறைவார்த்தையைப் படிக்கவும் தியானிக்கவும், அதை வாழ்வில் உரிமைச் சொத்தாக்கவும், தம் ஒவ்வொருவரையும் அழைக்கிறது. "இறைவனின் வார்த்தைக்குப் பணிவுடன் செவிசாய்த்து விசுவாசத்தைப் பறைசாற்ற (இறை வெளிப்பாடு 1) வத்திக்கான் சங்கம் கோருகின்றது.

விவிலியம் ஒரு சிறு நூலகம் என்றால் மிகையாகாது. பல நூல்கள் வெவ்வேறு காலங்களில் தொகுக்கப்பட்டு, காலங்களின் சூழல்கள், மக்களின் பாரம்பரியங்கள், மக்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு இறை ஏவுதலால் எழுதப்பட்டாலும் ஆதியாகமம் தொடக்கம் இறைவெளிப்பாடு என்ற கடைசி நூல்வரை, அது தருகின்ற மாறாத செய்தி என்னவென்றால் இறைவன் மனிதன் மீது கொள்ளும் ஆழமான அன்பை, அக்கறையை, உறவைத் தெரியப்படுத்துகின்றது.

வார்த்தை வலிமையுள்ளது. ஆற்றல் உள்ளது. படைக்கும் திறம் உள்ளது. நிச்சயமான பயன்தரும் என்ற உண்மைகளை "மழையும் பனியும் வானத்தில் இருந்து இறங்கி, அவ்விடத்திற்குத் திரும்பாமல் நிலத்தை நனைத்துச் செழிப்பாக்கி, அதில் முளை கிளப்பி விளையும்படி செய்து விதைப்பவனுக்கு விதையும், உண்பவனுக்கு உணவும் தருகின்றது. அவ்வாறே நம் வாயினின்று புறப்படும் வார்த்தையும் இருக்கும். நாம் விரும்பியதெல்லாம் செய்து முடிக்கும் எதற்காக நாம் அதை அனுப்பினோமோ அதை நிறைவேற்றும்." (இசை 55: 10) என்ற உண்மையை இசையாஸ் குறிப்பிடுகின்றார். "இறைவார்த்தை உயிர் உள்ளது; ஆற்றல் மிக்கது. இருபக்கமும் கருக்கு வாய்ந்த எந்த வாளிலும் கூர்மையானது" என்ற வார்த்தையின் ஆற்றலைப்பற்றிய ஆழமான கருத்தை புனித சின்னப்பர் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில் கூறுகின்றார். (எபி. 4: 12)

வாழ்க்கையின் பல தத்துவங்களுக்காகவும், இலட்சியங்களுக்காகவும் கோடி அலையும் கூட்டத்திற்கு உரிய உயர்ந்த தத்துவங்களும், வாழ்வின் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கும், கவலைகளுக்கும் விடைகாண முயலும் மக்களுக்கு ஏற்ற சிறந்த பதில்களும் ஏராளமாக வேதாகமத்தில் காணலாம். திறந்த மனப்பான்மையும் விசுவாசக் கண்ணும் உள்ளவர்களால்தான் இதைப் பார்க்க முடியும்.

இரண்டாம் வத். சங்கம் இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். முன்னர் இரட்சணிய அடையாளம் முக்கியத்துவம் பெற்றதே யொழிய இறைவார்த்தை போதியளவு முக்கியம் பெறவில்லை. வத்திக்கான் சங்கத்தின் மறுமலர்ச்சியின் ஊடாக இறைவார்த்தை திருப்பலியிலும், திருவருட்சாதனங்களிலும், ஏனைய வழிபாடுகளிலும் ஒரு முக்கிய பகுதியை எடுப்பதைப் பார்க்கின்றோம்.

திருச்சபை ஓர் அடையாளம். அருட்சாதனம், மாத்திரமல்ல, எல்லாவற்றிற்கும் மேலாக அது ஓர் இறைவார்த்தை என்பது 'மைக்கல்ஸ்கேமுஸ் (Michael Schmaus)என்னும் இறையியல் அறிஞரின் கருத்தாகும். ஆகையினால் இறைவார்த்தை அறிவிப்புப்பணி திருச்சபையின் இன்றியமையாத பணியாக அமைகின்றது. அறிவிப்புப்பணி இல்லையென்றால் திருச்சபை தேவையற்றது என்று கூட கூறத் தோன்றலாம்.

இன்னும் திருச்சபை ஒரு களஞ்சியம். இதனூடாகத்தான் வாழ்வுதரும் இறைவார்த்தை ஊற்றெடுத்து எல்லா நிலங்களையும் வளப்படுத்தும் புதிய தூய நீர்ச்சுனையாகும். ஆகவேதான் வேதாகமத்திற்குரிய விளக்கம் கொடுக்க திருச்சபையின் உயிருள்ள ஆசிரியத்திடமே அதிகாரமும், ஒப்படைப்பும் உள்ளதென்பதையும் (இறைவெளிப்பாடு 10) மாறுபட்ட தனிப்பட்ட விளக்கங்களைக் கொடுக்க எவருக்கும் அதிகாரம் இல்லையென்பதையும் திருச்சபை வற்புறுத்துகின்றது.

இன்று முக்கியம் என்னவென்றால் வரலாற்றில் பேசிய கடவுள், இறுதியாகத் தம் திருமகன் வாயிலாக மக்களோடு பேசிய கடவுள் இன்றும் திருச்சபையின் மூலமாகக் குறிப்பாக இறைவார்த்தை வழியாக நம்மோடு உறவாடுகின்றார். தம் பிரசன்னத்தை வெளிப்படுத்துகின்றார், நம்மோடு உறவாடுகின்றார் என்ற உயர்ந்த உண்மையை நாம் விசுவசித்து, வேதாகமத்தை இறைவார்த்தையின் சக்தியை, பலத்தை உணரவும், திருப்பலியிலும், அருட்சாதனங்களிலும், அவை தருகின்ற செய்தியை நாம் வாழ்வாக்கிக் கொள்ளவும் ஆவல்கொண்டு "வேதாகமத்தை அறிபவன் கிறிஸ்துவை அறிவான்" என்ற புனித ஜெரோமின் எண்ணங்களை வீட்டிற்கு ஒரு விவிலியம், நாளுக்கொரு அத்தியாயம் என்ற உறுதிப்பாட்டினால் திருச்சபையின் வழிநின்று வேதாகமத்தை ஆழமாகப் படிக்கவும், தமது இல்லங்களிலும், வழிபாடுகளிலும் பயன்படுத்தவும், அதன் பலத்தை உணர்ந்து வாழவும் முயற்சிப்போமாக!

ஆர். எச். சகாயநாயகம்
மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர்

## வேதாகமத்தைப் புரட்டுங்கள் வீரப்பெண்களைக் கண்டுபிடியுங்கள்

| | | |
|---|---|---|
| ஆதி. | 3 | கொலைக்காரனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டவள் |
| | 6:4 | வேதப் புதல்வர்களால் விரும்பப்பட்டவர்கள் |
| | 18:13 | 'நான் சிரிக்கவில்லை' என்றாள் இவள். |
| | 20:3–7 | இவளைத் தொட்டவன் சாவான் |
| | 21:12 | "உன் மனைவி சொல்வதைக் கேட்டு நட" |
| | 21:20 | ஆண்டவர் "இவளிடம் எங்கே போகிறாய்?" என வினவினார். |
| | 29: | ஆண்பிள்ளையை ஏமாற்றியவன் இவளிடம் ஏமாறினான். |
| | 30:14 | இவள், ஒருத்தியின் கணவனை அபகரித்துக் கொண்டாள். |
| | 31:35 | இவள் வீட்டு விக்ரகங்களைத் திருடிக்கொண்டாள். |
| | 34:25 | இவள்பொருட்டு கொடுமைகள் பல நிகழ்ந்தன. |
| | 38:18 | இவளது துணிச்சலான ஆனால் தகாத செயலால் யூதா கோத்திரம் நிலைத்தது. |
| யாத். | | |
| | 1:15 | பாரவோன் கட்டளையை மீறியவர்கள். |
| | 2: 9 | குழந்தையைக் கொன்றுபோடுவதற்குப் பதிலாகச் செலவிட்டு வளர்த்தவள். |
| | 12:14 | இப்பெண்ணுக்குத் தொழுநோய் ஏற்பட்டது. |
| யோசு. | | |
| | 2:15 | விலைமாது......ஆனால் பாராட்டப்படுபவள். |
| நீதிபதி | | |
| | 5:25 | வீரனின் கன்னப்பொட்டில் ஆணிவைத்து அடித்தவள். |
| | 9:53 | எந்திரக்கல்லை உருட்டிவிட்டு அபிமெலேக்கைக் கொன்றவள். |
| | 14: | பலசாலி சாம்சனையே அழித்தவள். |
| ரூத். | | |
| | 4:17 | மாமியார் மெச்சிய மருமகள்; தாவீதின் முப்பாட்டி. |
| 1சாமு. | | |
| | 1:20 | இவள் சாமுவேலின் தாய். |
| | 9:11 | சவுலுக்கு வழிகாட்டி உதவியவர்கள். |
| | 18:17 | சவுல் தாவீதைப் பகைக்கக் காரணம் பெண்களின் ஆடல்பாடல்கள். |
| | 19:13 | பொம்மையைப் படுக்கவைத்து தாவீதைக் காப்பாற்றியவள். |
| | 25:18 | கணவனுக்குத் தெரியாமல் தாவீதுக்கும் சேனைக்கும் உதவியவள். |
| | 28:12-14 | சவுல் குறிகேட்ட பெண். |

# வேதாகம சிறப்பிதழ்

★

தொகுப்பு
யாழ். மறைக்கல்வி நடுநிலையம்



### வாழ்வளிக்கும் விவிலியம்

ஞாலமே தோன்று முன்னே
ஞானமாய் தேவன் திட்டம்
அழகுற எடுத்துச் சொல்லி
வேதமாய் விளங்குகின்ற
விவிலியமே வாழ்வளிக்கும்.

நீதியில் அரசின் ஆட்சி—அன்பு
நெறி முறை மக்கள் வாழ்வு
பேதினி தழைக்க உரமாம்
பாதையினால் உலகம் அழியும்
அன்புதான் இன்ப ஊற்று
— இதன்
அடக்கமே விவிலியமே.

பாவமே புகுந்த உலகில்
பகைமேகம் சூழ்ந்து நம்மை
அழிவிற்கு பாதைகாட்டி
அமைதியென் றழைக்கையிலே
தேவனின் வார்த்தை ஒன்றே
பாதையாய் அமைந்து நிற்கும்

எல்லையில்லாத் தொல்லை
நாளும்
எமை வந்து வாட்டும்போது
இறைவார்த்தை
அனைத்திற்குமே
இலக்கணமாக நின்று
விலக்கிடும் தீமையெல்லாம்
வாழ்விக்கும் நாளும் எம்மை

— அ. பீற்றர் ராஜன்

## உயிருள்ள வார்த்தை உனக்கில்லையா?

நம் அன்றாட வாழ்வில் பல தரப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றோம்; கேட்கின்றோம். சில வார்த்தைகள் நம் மனதிற்கு ஆறுதலை, அமைதியை, உற்சாகத்தைத் தருவதை அனுபவிக்கின்றோம். சில வார்த்தைகள் துயரத்தை மன வேதனையைத் தந்து நம்மை வருத்திக்கொண்டே இருப்பதையும் அனுபவிக்கின்றோம் யாரிடமிருந்து நாம் வார்த்தைகளைப் பெற்றுக்கொள்கின்றோமோ அதற்கேற்ப அவ்வார்த்தைகளின் தாக்கமும் நம்மால் உணரப்படுகின்றது. அப்படியென்றால் சாதாரண மனித வார்த்தைகளுக்கே ஆக்க, அழிக்க சக்தி உண்டென்பதுதானே விளக்கம்.

மனித வார்த்தைகளுக்குச் சக்தி உண்டென்றால், இறைவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு ஆற்றல், வலிமை உண்டென்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும் இறைவனுடைய வார்த்தைகள் அடங்கிய பெருநூல்தான் — திருநூல், வேதாகமம், விவிலியம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. நாமும் ஏற்றுக்கொள்கின்றோம், பெருமைப்படுகின்றோம் — இவ்வார்த்தைகளில் இஸ்ராயேல் மகன், இஸ்ராயேல் மக்கள், இஸ்ராயேல் தலைவர்கள், அரசர்கள் அடைந்த நன்மைகளை, வெற்றிகளை, ஆறுதல்களை எல்லாம் வேதாகமத்தில், பழையஏற்பாடு மீட்பு வரலாற்றில் படிக்கின்றோம் — மாமிசமாகி நம்மிடையே வாசம்செய்த வார்த்தையானவரின் வார்த்தைகளின் வல்லமையைப் புதிய ஏற்பாட்டில் புனித நற்செய்திகளில் படிக்கின்றோம். இறைவார்த்தையில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு அதன் சீரிய வழிகாட்டலில் வாழ்ந்த சீடர்களின், முதல் கிறிஸ்தவர்களின் ஏன் பல்வேறு நாட்டுமக்களின் உயரிய வாழ்க்கை முறைகளை புதிய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகங்களான கடிதங்களிலே பார்க்கின்றோம்.

இறை வார்த்தை தந்த இனிய அனுபவத்திலே தன் வாழ்க்கைச் சிகரத்தைக் கட்டியெழுப்பிய பல்லாயிரக்கணக்கோரை நம் திருச்சபை வரலாற்றிலே சந்தித்து மகிழ்கின்றோம். அப்படியென்றால் ஏன்

எஸ். எவ். சவுந்தரம்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# நிம்மதி தேடும் நெஞ்சங்கள்

விடியலை அறிவிக்க கொக்கரக்கோ என கோழி கூவியது புள்ளினங்களின் ஓசையும் சேர்ந்து உறங்கியிருந்த மாந்தரை விழிப்புறச் செய்தது. விடியலின் பரபரப்பில் அவரவர் எழுந்து சத்தம் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டனர்.

ஆனால் அருளானந்தத்திற்குமட்டும் ஏனோ விடிவதிலே ஒரு உற்சாகமும் பிறக்கவில்லை. ஏன் இந்தப் பொழுது விடிந்ததுஎன்ற ஏக்கம். வழக்கமாக அருளானந்தம் ஏழுமுது விடியுமுன் எழுந்துவிடுவார் தம் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு பிள்ளைகளையும் எழுப்பிவிட்டு அவர்களைப் படிக்க உற்சாகப்படுத்துவார் இன்று ஏனோதானோ என்று விழுந்து கிடப்பது அவரது மனைவி மார்த்தாவுக்குப் புதிராக இருந்தது. இன்று விடிய எழும்புவதிலிருந்து தங்களுக்கும் விடுதலை என்று பிள்ளைகளும் பள்ளிகொள்ளத் தொடங்கிவிட்டார்கள்.

மார்த்தா சுடு பறக்கும் காப்பியுடன் போய் அருளானந்தத்தை எழுப்பும் போதும் ஏதோ உணர்ச்சியற்ற மரக்கட்டையைப்போல எழுந்து உட்கார்ந்திருந்தார். "உங்களுக்கு இன்று என்ன நடந்தது; ஒருபோதும் இல்லாதவாறு கவலையோடு இருக்கிறீங்களே.

சிறுகதை:
ம. யேசுதாசன

முதலிலே கோப்பியைக் குடியுங்கோ" என்ற மார்த்தாவின் குரல்கூட அருளானந்தத்தின் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. அவருடைய கண்கள் எங்கோ நிலைகுத்தி நின்றன. சிந்தனை எங்கோ சிறகடித்துப் பறந்தது தனது மனைவி மார்த்தா அருகில் நிற்பதுகூட அவருக்கு உணர்வில்லை. திடீரென்று எழுந்த அருளானந்தம் வெறி பிடித்தவர் மாதிரி தனது அறையை நோக்கி ஓடினார்.

மார்த்தாவின் நெஞ்சிலே ஆயிரம் கேள்விகள் குத்திட்டு நின்றது. 'இவருக்கு என்ன நிகழ்ந்துவிட்டது, ஆறுதல் யரின்கோடுகள் அவர் முகத்திலே தெரிகின்றதே எந்நாளும் இப்படி இல்லாத இவர் இன்று ஏன் இப்படி இருக்கிறார். ஐயா! கடவுளே!! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே,' என்று அவள் உள்ளம் அங்கலாய்த்தது. எதையும் மறைக்காது தன்னிடம் பகிர்ந்துகொள்ளும் இவர் ஏதோ ஆழ்த துயரத்தைத் தன் உள்ளத்தில் வைத்து வேகிறாரே என்று நொந்து கொண்டு அவரைத் தேடித் தன் கால்களைப் பாவவிட்டாள்.

அங்கே அருளானந்தம் தன் கையில் வேதாகமப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருப்பதைக் கண்டாள். ஓர் இடத்தில் ஆழ்ந்து படிக்கத் தொடங்கினார். படித்துக் கொண்டிருக்கும்போதே அவரது முகத்தில் மாற்றம் ஒன்று பிறந்தது. பழைய இயல்பும், களையும் அவர் முகத்தில் திரும்பியது. அவரைச் குழப்பக்கூடாதென்று மார்த்தாள் அறைக்கு வெளியே நின்றே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரம் சென்றதும் மனநிறைவோடு சிரித்துக் கொண்டு அருளானந்தம் வெளியே வந்தான். அந்நிலையில் அவரைப் பார்த்ததும் மார்த்தாவுக்கு அளவற்ற மகிழ்ச்சி. ஆனாலும் அதைப் பற்றிக் கேட்டுவிடவேண்டுமென்று அவள் உள்ளத்தில் துடிப்பு. அவளுடைய எதிர்பார்ப்பை அறிந்த அருளானந்தம் "மார்த்தா இன்றுஎன் மனதில் கவிந்திருந்த துன்பம் அகன்றது. எப்போதோ ஒரு குரவர் சொல்லக் கேட்டது வாழ்வின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் வேதாகமம் விடை தருகிறது என்று அதன்படி என்வாழ்வில் நேற்று நிகழ்ந்த பிரச்சினைக்கு இன்று இந்த வேதாகமத்தின்மூலம் விடை கண்டுவிட்டேன். ஆறுதலைப் பெற்றுவிட்டேன். எனது அலுவலகத்திலே நான் செய்யாத குற்றத்தை என்மீது சுமத்திவிட்டார்கள். உனக்குத் தெரியும் நான் எவ்வளவு கடமை உணர்வுடன் வேலைசெய்பவன் என்று. ஆயினும் வீண்பழி என்னைச் சூழ்ந்தபோது நான் தடுமாறிவிட்டேன், நிலைகுலைந்துவிட்டேன். மனதிலே பாரம். இனி வாழ்ந்து என்ன என்ற கேள்விக்குறி என் நெஞ்சில் பதிந்துவிட்டது. ஆனால் இன்று தெளிவுபெற்றுவிட்டேன். இறைவனது வார்த்தைகள் என்னைத் தொட்டுவிட்டன. அவை எனக்கு ஆறுதலையும். தெம்பையும் தருகின்றன. இனி நான் கவலைப்படமாட்டேன் சரி, சரி கந்தோருக்கு நேரமாகிறது. நான் குளித்துவிட்டு வருகிறேன்." என்றபடி தனது அலுவல்களைக் கவனிக்க புறப்பட்டார். மார்த்தாவும் மனம் நிறைந்தவளாய் சமையல் அறையை நோக்கிச் சென்றாள்.

## தெரிந்து கொள்ளுங்கள்

1. சாமுவேல் என்ற பெயரின் பொருள்,
2. வேதாகமத்தில் மிகச் சிறிய வசனம்,
3. சிங்கத்தைக் கொன்ற வீரர்கள் என வேதாகமத்தில் பாராட்டுப் பெறுவோர்,
4. கணவனைக் காப்பாற்ற தந்தையிடம் பொய் பேசிய பெண்,
5. உப்பைக் கொண்டு தண்ணீரைச் சுத்தம் செய்தவர்,
6. வெளிநாட்டுத் துணிகள் அணிவதை எதிர்த்துக் கண்டித்தவர்,
7. "என் இடுக்கண்கள் யாவும் தராசில் இடப்படுமானால் நலம்" எனக்கூறிய நீதிபதி,
8. தாகோன் ஆண்டவருடைய பேழைக்குமுன் முகங்குப்புற விழுந்து கிடக்கக் கண்டது,
9. கழுதையுடன் பேசிக்கொண்டிருந்தவர்,
10. தென்றலின் இனிமையில் இறைவனைச் சந்தித்த இறைவாக்கினர்,
11. துயரத்தில் இறைவனின் துணை கேட்டு மன்றாடிய பெண்ணைக் குடி வெறியில் உளறுவதாக நினைத்த குரு,
12. நீக்ரோ (எத்தியோப்பிய) பெண்ணை வாழ்க்கைத்துணை வியாக்கிய பெருந் தலைவன்,
13. எலும்புகள் உயிர்பெற்றெழுவதைக் காட்சியில் கண்ட இறைவாக்கினர்,
14. மனுமகனின் அறிகுறி,
15. 'மனிதன்', 'அவன் மகிமை' இவை இரண்டும் ஒப்பிடப்படுவது,
16. இயேசுவுக்கு ஒப்பிடப்பட்ட தானியம்,
17. முகத்தைச் சுவர்ப்புறம் திருப்பிய மனிதன்,
18. சமூக நீதிக்கென உழைக்க இறைவாக்கினராக அழைப்புப் பெற்றவர்,
19. உறங்கும்போது தலையின்கீழ் கல்வைத்து உறங்கியவர்,
20. கெட்ட அத்திப்பழமாக இறைவன் கூறிய யூத அரசன்.

### தெரிந்து கொள்ளுங்கள் விடைகள்

| | |
|---|---|
| 1. இறைவனிடம் கேட்டவரம் கிடைக்கப் பெற்றவர். | 2. அரு. 11: 35 |
| 3. சாம்சன், தாவீது, பெனையா | 4. மிக்கோல் 1 சாமு. |
| 5. எலிசா 2 அர. 20-22 | 6. செப்போனியாஸ் 1:8 |
| 7. யோபு | 8. அசோத்தியர் 1 சாமு 5:3 |
| 9. பாலாம் எண் 22: 28-30 | 10. எலியாஸ் 1 அர. 19:12 |
| 11. (அன்ன) -குரு ஏலி | 12. மோயீசன் எண்ணாகமம் |
| 13. எசெக்கியேல் 37 | 14. சிலுவை மத். 24:30 |
| 15. மனிதன் – புல், மகிமை– புல்வெளிப்பூ | 16. கோதுமை அரு. 12:24. |
| 17. ஆக்காப் 1 அர. | 18. ஆமோஸ் |
| 19. யாக்கோபு | 20 செதேசியாஸ் எரே. 24:8 |

## ஆறுதல் அளிக்கும் இறைவாக்கு

"எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள்.
இடைவிடாது செபியுங்கள்
என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள்."
(1 தெச. 5: 16-17)

"தீமை உன்னை வெல்ல விடாதே;
நன்மையால் தீமையை வெல்க." (உரோ. 12: 21)

"தேவ ஆவி விளைவிக்கும் பயன்களாவன: அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம்." (கலா. 5: 23)

'வீட்டுக்கொரு வேதாகமம்
நாளுக்கொரு அதிகாரம்'

## திருமறைநூற் களஞ்சியத்துள் புகுவோம்

1. பழைய ஏற்பாட்டு நூல்கள் — 46
2. புதிய ஏற்பாட்டு நூல்கள் — 27

பழைய ஏற்பாட்டுப் பிரிவுகள்:

1. பஞ்சாகமம் (சட்டம்)
2. வரலாற்று நூல்கள்:
யோசுவே, நீதிபதிகள், ரூத், 1, 2. அரசர் அல்லது 1, 2 சாமுவேல், 3, 4 அரசர், 1, 2 நாளாகமம், எஸ்திராஸ், நெகேமியாஸ், தொபியாஸ், யூதித், எஸ்தர், 1, 2 மக்கபேயர்.
3. ஞானாகமங்கள்:
யோபு, சங்கீதங்கள், பழமொழி ஆகமம், சங்கத் திருவுரை, உன்னத சங்கீதம், ஞானாகமம்.
4. இறைவாக்கினர்களின் ஏடுகள்:
இசையாஸ், (புலம்பல், பாரூக் ஆகியவை உட்பட) எரேமியாஸ், எசேக்கியேல், தானியேல், யோவேல், ஆமோஸ் அப்தியாஸ், மிக்கேயாஸ், யோனாஸ், நாகூம், ஆபகூக், செப்போனியாஸ், ஆகாய், சக்கரியாஸ், மலக்கியாஸ்.

புதிய ஏற்பாட்டு நூற் பிரிவுகள்:

1. வரலாற்று நூல்கள்:
புனித மத்தேயு, மாற்கு, லூக்கா, அருளப்பர், அப்போஸ்தலர் பணி.
2. அப்போஸ்தலர்களின் கடிதங்கள்:

புனித சின்னப்பர் எழுதிய கடிதங்கள்;
உரோமையர், கொரிந்தியர் 1, 2, கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசேயர், தெசலோனிக்கேயர் 1, 2, திமோத்தேயு 1, 2, தீத்து, பிலமோன், எபிரேயர்.

பொதுத் திருமுகங்கள்:
புனித யாகப்பர், புனித இராயப்பர் 1, 2, புனித அருளப்பர் 1, 2, 3, புனித யூதா, திருவெளிப்பாடு.

## நம் அன்றாட வாழ்வில் திருநூலைப் பயன்படுத்துவோம்

குழந்தை பிறப்புவிழா அல்லது பிறந்தநாள் விழா:
இசை 7: 14-15, 9: 6-7.
லூக். 2: 8-21, சங்கீதம் 2 இறுதியில் பாடலாம்.
திருமணத்தின்போது அல்லது திருமண நிறைவுநாள்:
தொபி 8: 4-9, எபேசி 5: 21-23.
அரு. 2: 1-11, பழமொழி 31: 10-31.
இறுதியில் சங்கீதம் 45-127.
நோயுற்றிருக்கையில்:
யோபு 2: 1-10, இசை, 38: 1-8,
யாகப். 5: 13-18, இறுதியில் சங்கீதம் 30.
இறந்தோரின் நினைவுநாள்:
யோபு 19: 20-21, 2 மக்க. 12: 42-45,
அரு. 11: 11-27, 1 தெசலோ. 4: 13-18.
கலையான வேளையில்:
மத். 5: 4, 6: 25-34, 1கொரி. 1: 3-7,
1 இரா. 5: 6-7.

## செபமாலையை வேதாகமத்தில் சிந்திப்போம்

மகிழ்ச்சி:
லூக். 1: 26-38, 1: 39-45, 2: 1-20, 2: 22-38, 2: 41-52.
துக்கம்:
லூக். 22: 19-53, அரு. 18: 19-33,
மத். 27: 24-31,
லூக். 23: 26-43, அரு. 19: 23-30.
மகிமை:
மாற்கு 16: 1-8, அப். பணி 1: 11, 2: 1-13,
திருவெளிப்பாடு 12: 1-6, 21: 1-8.

# இளைய தலைமுறையின் இன்றைய பங்களிப்பு

"உன்னைத் திருத்திக்கொள், சமூகம் தானுகவே திருந்தி விடும்" ஆம் எனது செயல்கள் தான் நான் வாழும் சமூகத்தின் செயல்கள்; எனது நாட்டின் செயல்கள் தான் இவ்வுலகத்தின் பிரதிபலிப்பு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும். இன்றைய சமுதாயத்தில் இளைய தலைமுறையின் பங்கு முக்கியமானதொன்ருக காணப்படுகிறது.

எமது பின்னணியை எடுத்து நோக்கும் போது அன்பு,அறம், அஹிம்சை என்றெல்லாம் பேசப்போனுல் ஏதோ சுயநலத்திற்காகத் தான் பேசுகின்ருன் என்ற நிலைப்பாடு உருவாகியுள்ளது. அவை கோழைகட்குரியதொன்றென எண்ணிக் கேலியாகச் சிரிக்கின்ருேம். அவன் செய்கின்ருன் நான் செய்தால் என்ன என்று மட்டும் தான் சிந்திககிருேமே தவிர நான் செய்வது சரியா பிழையா என்று சிறிதளவேனும் சிந்திப்பதில்லை. மனச்சாட்சிகள் தட்டிக்கேட்டாலும் அதை ஒரு புறத்தே வைத்து விடுகிருேம். அவசர குடுக்கைகளாக மாறி திடீர் திடீர் என தீர்மானங்களை எடுத்து அதனை செயலாற்றியும் விடுகிருேம். அது அடுத்தவனின் வாழ்வுக்கு எவ்வளவு இடையூறுகளையும், இடைஞ்சல்களையும் கொடுத்து அவனைப்பாதிககிறது என்பதை எள்ளளவேனும் எண்ணுவதில்லை. எமது ஒவ்வொரு செய்கைகளின் விளைவுகள் அடுத்தவனைப் பாதிக்காத வகையில்தான் எமதுசுதந்திரம் பூரணமை பெறுகிறது. எனக்கு சுதந்திரம் உண்டு, நான் எதையும் செய்வன் என்ற நிலைப்பாடு முற்றிலும் தவருன தொன்ருகும்."

"நான்தான் பெரியவன்; நான் தான் உயர்ந்தவன்; என்னை விட யார் இருக்கிருர்கள்" என்று எண்ணுகிருேம். இது எவ்வளவு கீழ்த்தரமானது என்பதை மறந்துவிடுகிருேம். நாம் எதை மற்றவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்ருேமோ அதையே பிறருக்கு செய்தல் வேண்டும். மற்றவர்கள் எனக்கு மரியாதை தர வேண்டும். செல்லுமிடமெல்லாம் என்னை மதிக்கவேண்டும். ஆனுல் நான் மற்றவர்களை மதிக்க மாட்டேன் என்ருல் இது எந்த வகையில் நியாயமானது.

இன்னுமொரு உள்ளம் வேதனையாலும், கவலைகளாலும் வருந்திக் கொண்டிருக்கும் அதேவேளையில் நாம் கண்டும் காணுதவர் போல் எனக்கென்ன? என்று எனது சுகங்களையும் எனது சௌகரியங்யும் கவனித்துக் கொண்டு எத்தனை நாட்கள் வாழ்ந்திருக்கிருேம்.

மனிதாபிமானம், ஒற்றுமை அன்பு என்னும் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு இன்றைய உலகில் எத்தனையோ கழகங்கள், சங்கங்கள் எல்லாம் உருவாகியுள்ளன. அதேவேளை போரும் பூசலும், அநீதியும், அக்கிரமங்களும் எங்கும் மலிந்து காணப்படுகிறது.

எனவே ஒவ்வொரு இளைஞனும், யுவதியும் இவற்றை நன்ருக சிந்திக்கவேண்டும். சிந்திப்பதோடு மட்டும் நின்றுவிடாது செயலாற்றவும் துணிதல் வேண்டும். அடுத்தவனின் சொற்களுக்காகவன்றி அடுத்தவனுக்காகவே எமது வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும். எங்கே ஆரம்பியுங்கள் உங்கள் போராட்டத்தை அன்புக்காக, ஒற்றுமைக்காக!

"எழிலூர் மகள்"

# துயருறுவோரில் இறைவனைக் காண்போம்

இன்றைய சமூகத்திலே பெற்ருேரை இழந்தவர்களாக, பிள்ளைகளை இழந்தவர்களாக, சொத்துக்கள் அனைத்தையுமே இழந்தவர்களாக எங்கள் மக்கள் வாழ்க்கை நடாத்திக் கொண்டிருக்கின்ருர்கள். இவைகள் அனைத்தையுமே எம்வாழ்வில் கண்டும் காணுதவராகக் கேட்டுக்கேளாதவராக வாழ்ந்து வருகின்ருேம். அன்புக்கு ஏங்கும், உதவிக்கு ஏங்கும் இச் சகோதரருக்கு உதவ மறுக்கிருேம்.

இறைவன் நமக்கு இரக்கம் காட்ட கிறிஸ்தவர்களாகிய நாமோ கிறிஸ்தவ மதிப்பீடுகள் அற்றவர்களாக, இரக்கம் சிறிதளவும் அற்றவர்களாக என் குடும்பம், என் பிள்ளை, என் சொத்து, என் சுகபோகம் என ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே வாழுகின்ருேம். அதிகமான குடும்பங்களிலே ஏதோ ஒரு வகையில் பாதிப்பு ஏற்பட்டுத்தானிருக்கிறது. வருந்துபவர்கள் வருந்திக்கொண்டேயிருக்கட்டும், ஆடம்பரத்தையும் விரும்புபவர்கள் அதிலே மூழ்கிக் கொண்டேயிருப்பவர்களாக நாம் நாட்களைக் கடத்துகிருேம். பெயருக்கும் புகழுக்குமாக எத்தனையோ செய்கிருேம். இடக்கை செய்வதை வலக்கை அறியாதிருந்தாற்ருன் நாம் செய்யும் உதவிக்கு மிகுந்த கைமாறு கிடைக்கும்.




துயரப்படும் இவ் ஒவ்வொரு மனிதனிலும் இறைவன் இருந்து பசியாயிருக்கிறேன், உணவு தருகிருயா? தாகமாயிருக்கிறேன். தண்ணீர் தருகிருயா? சிறையில் இருக்கிறேன்., என்னைப்பார்க்க வருகிருயா? என்று கேட்டுக் கொண்டே இருக்கிருர். அல்லலுறும் இந்த ஏழைகளிலே இதயம் நொந்து வாழும் இம் மக்களிலே இறைவனைக்கண்டு எம்மையே தியாகம் செய்து எம்மால் இயன்றதை அவர்களுக்களிப்போம்.

டொறின் சவரிப்பிள்ளை

# குருகுமுத்தண்ணையின் கிசுகிசு —52

அடைக்கலம்: இந்தமுறை சிறப்பா இருக்குமண்ணை கிறிஸ்மஸ்.

குருகுமுத்தண்ணை : அது ஏன்ரா தம்பி அப்பிடி.....

அடைக்க : வெளிநாட்டாலையும் வருகினம். நாடும் கொஞ்சம் அமைதியாய் இருக்குபோல அதுதான் அண்ணை.

குருகுமுத் : தம்பி, எதடா சிறப்பு? வெளியாலவந்தென்ன உள்ளால வந்தென்ன. பழையபடி பத்தேக்கை போகவல்லோ பாக்கிறியள்.

அடைக்க : நத்தார் வருஷமெண்டா பணம்தானே முக்கியம்

குருகுமுத் : தம்பி, நெருக்கடி நேரத்தில இருந்த ஒற்றுமை இறைபக்தி வரவரமாறி உங்கட கவனமெல்லாம இப்ப உடுப்படைக்காட்ட, நகையைக்காட்ட எண்டெல்லோ போட்டிபோடுறியள். இவைக்குத் தானே அந்தப்பணத்தை கடவுளாக்கிறியள் பாரு!

## மறுமலர்ச்சியைத் தேடும் மனிதகுலமே

விடியலுக்கு முந்திய பூபாளமே
இரவின் அமைதியில் இன்பமாய்
தூங்கி விடிவின் அதிர்ச்சியில்
மறுமலர்ச்சி காணும் மனிதகுலமே.

சோர்ந்த மனங்களும் சோகத்தில் வாட
இரவின் வரவை இமைகள் காக்க
அத்தனை மனங்களும் இரவின்
வரவால் மறந்து மறுமலர்ச்சி காணும்.

தென்புலோலியூர் சிவநாதன்




# 3-ருேகானும் ராணியும் மாறுபட்டவர்கள்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

அனுபவங்கள்தான் மனிதனுக்கு வாழ்வில் பெரும் துணையாகின்றன. அவனது செயற்பாடுகளுக்கு பெரும் பங்களிப்பைச் செய்கின்றன.

பழைய அனுபவங்களை நாம் இலகுவில் மறப்பதில்லை. பழைய அனுபவங்களிற் தான் நாம் புதிய தீர்மானங்களுக்கு வருகிருேம்.

பழைய அனுபவங்கள் நம் வாழ்வில் அதிக செல்வாக்குப் பெறுகின்றன.

இவை கூட நம்மை வேறுபடுத்தி விடுகின்றன

இவற்றைவிட தனிப்பட்ட விடயங்கள் உண்டு.

இவற்றில் நாம் இன்று அதிகம் பார்ப்பது சமயப் பிரச்சனையாகும். சமய அடிப்படைப் பிரச்சினைகளுக்கு நியாயமாகவும், நேர்மையாகவும், திறந்த மனத்துடனும் தீர்வுகாண வேண்டும். இல்லாவிடின் பிள்ளைகள் சமயமே இல்லாத ஒரு நிலைக்குத்தான் வருவார்கள்.

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை.

**அனுபவங்கள்:**

ஒருவனது சொந்தக் கடந்தகால அனுபவங்கள் - நல்லதும் கெட்டதும், மகிழ்ச்சியானவையும், கசப்பானவையும் இன்றைய செயற்பாடுகளில் அதிக பங்களிப்பைச் செய்கின்றன. அறிந்தோ அறியாமலோ முந்திய அனுபவங்கள் பிந்திய செயல்களில் பின்னி நிற்கின்றன. சரியாகவோ தப்பாகவோ பழைய அனுபவங்களிலிருந்து தான் ஒருவர் எடுத்துக்காட்டுகளை முன்வைத்து தீர்மானங்களுக்கு வருகிருர். மனத்தை உறுத்திய அல்லது மனதில் ஆழ்ப்பதிந்துவிட்ட மறக்கமுடியாத அனுபவங்கள்தான் அதிக செல்வாக்குப் பெற்றுவிடுகின்றன. "நல்ல மாட்டுக்கு ஒரு சூடு." என்ருே, "சூடுகண்டபூனை அடுக்களையை நாடாது" என்ருே வழங்கப்படும் பழமொழிகள் அனுபவரீதியாக எழுந்தனவே என்று கொள்ள வேண்டும்.

வேறுபட்ட சமய சமூக, கலாச்சார, பண்பாட்டு வித்தியாசங்களல்லாது பொதுவில் வெவ்வேறு குடும்பங்களிலிருந்து திருமணத் தம்பதிகளாகப் போகும் இருவர் பல தனிப்பட்ட வேற்றுமைகள், வேறுபாடுகள் உடையவர்களாகவே இருப்பர். இந்த வேற்றுமைகளை அவர்களது விருப்பு வெறுப்புக்கள், மனுேநிலைகள், மனப்போக்குகள், அவர்களது நாட்டங்கள், கொள்கைப் பிடிப்புக்கள் பற்றுக்கள் என்பவற்றில் அவதானிக்க முடியும். சிக்கனமாக - கையிறுக்கமாக வாழும் குடும்பத்தைச் சேர்ந்த மங்கை ஒருத்தி இயற்கையாகவே பணத்திலே கவனமுள்ளவளாக இருப்பாள். செலவாளிக் குடும்பத்துப் பையன் கட்டுமட்டில்லாமல் செலவு செய்வான் இன்னுமொரு இளைஞன் கிராமிய இசையை அல்லது கர்நாடக இசையை விரும்புபவனுயிருக்க இளம் யுவதி ஒருத்தி மேற்குநாட்டிசையில் அல்லது இன்றைய பொப்பிசையில் நாட்டமுடையவளாயிருக்கலாம்.

சமூக, கலாச்சார, சமய வேறுபாடுடையவர்கள் திருமணத்தில் இணைய முற்படும் போது தனிப்பட்ட கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஏனெனில், அவர்கள் மிக ஆழமாக வேரூன்றிய உணர்வுகளில் எழுச்சிகளோடு சம்பந்தமானவர்களாயிருக்கிருர்கள். அசைக்கமுடியாத நம்பிக்கைகளில் ஊறிப்போன அவர்கள் உறவுகளில் பெரிய விரிசல்கள் — அல்லது இடைவெளிகள் ஏற்படுவது சகஜம். இப்படியான கலப்பு மணங்களில் சம்மந்தப்பட்ட இருவரும் நிதானமாகவும், தாராளமனப்பான்மையுடனும், விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மையுடனும் செயற்பட்டாலே எதிர்நோக்கும் இடைவெளியை நிரப்பமுடியும். சமய அடிப்படையில், வெவ்வேறு சமயத்தைச் சார்ந்த இருவர் ஒன்றுகூடலுக்கு (திருமண ஒன்றிப்புக்கு) அவரவர் கைக்கொள்ளும் மதக்கோட்பாடுகள் பிரச்சினைகளை உருவாக்கும். ஆதலால் அப்பிரச்சினைகளுக்கு நியாயமாகவும், நேர்மையாகவும் திறந்த மனத்துடனும் முகங்கொடுப்பது அவசியம்.

தேனருவி: திருவருகைக்கால 4ஆம் ஞாயிறு

## அமைத்கு தடை-சந்தேகம்

நம்பிக்கையில்தான் எந்த உறவும் கட்டி எழுப்பப்பட முடியும். இறைவன் ஒரு மறை பொருள், மனிதன் ஒரு மறை பொருள், வாழ்க்கை ஒரு மறை பொருள். இதனல் வாழ்வின் நிகழ்ச்சிகளுக்கு முழுமையான விளக்கம் அளிக்க முடியாத நிலை உருவாகிறது. இந்நிலையில் வாழ்க்கைப் பாதை இரு துருவங்களை நோக்கிப் பிரிகிறது. ஒன்று திறந்த மனதுடனும், நிறைநத நம்பிக்கையுடனும் உண்மையை அறிய, புரிய மேற்கொள்ளும் பயணம். இதன் முடிவு அமைதியும், வளர்ச்சியும். மற்றயது குறுகிய மனதுடனும், சநதேகப் பார்வையுடனும் திர்ட பிட்டு, அழித்து ஒழிக்கும் முயற்சி. இது குறுக்குவழிப் பயணம், இதன் முடிவு விரக்தியும், வெறுமையுமே.

ஆக்கிரமிப்பு உணர்வுகள் படையெடுப்புக்களாக அலை மோதி யூதாவை ஆண்ட ஆக்காஸ் மன்னனை அதிரவைத்தது. அந்நியர்களிடம் தஞ்சம் புகுவதைவிட வேறுவழி பிறக்காது என்று பாதை மாறிய போது, இறைவாக்கினர் மன்னனை நெறிப்படுத்துகிருர். 'நம்மோடு கடவுள்' இதை நம்பு என்ருர். கன்னிப் பெண் கருத்தாங்குவாள் என்ற அருங்குறியால் தம் வாக்கை உறுதிப்படுத்தினர் ஆண்டவர் கன்னிப் பெண் கருத்தாங்க முடியுமா என்ற சந்தேக வலையில் தடுமாறிய சூசை, அது ஆண்டவன் செயல் என உணர்ந்தார். சூசை ஒரு நீதிமானய் விளங்கியதாலேயே இறைவன் வழியைக் காணக் கூடியதாய் இருந்தது.

தெய்வததில் நம்பிக்கை கொள்ளாதவர் மனிதரை நம்பமுடியாது மனித உள்ளங்களில் கடவுள் குடிகொண்டாா, சந்தேகப் பேய்க்கு இடமில்லை. குடும்ப, சமூக உறவகளில் அன்பு செய்யவும, செய்யப்படவும் வேண்டியவர்கள் தம்மை அந்நியப்படுத்துகிருர்கள் என்ருல் இறை உணர்வு அதே வேகத்தில் குன்றிப்போகிறது என்பதே பொருள், எனவே திறந்தமனதுடனும், நிறைந்த நம்பிக்கையுடனும் இறைவனை எதிர்கொள்ளவும், ஏற்கவும் முனையும்போது பாதையில் பல மனிதர் எமக்கு அருகே அன்பில், நட்பில் இணைய வருவதையும் நாம் அனுபவிப்போம்,

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

## உயிருள்ள ..

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாமும் அந்த வார்த்தையின் வழிகாட்டலை, வார்த்தையின் பாதுகாப்பை, வார்த்தையின் வல்லபத்தை அனுபவிக்க முன்வரக்கூடாது. அனுபவிக்க வேண்டுமென்ருல் அந்த வார்த்தை நம் வாழ்க்கையின் அம்சமாக வேண்டாமா? பத்திரப் படுத்தி வைக்கும் பவுத்திரமான பழக்கத்தைக் கைவிட்டு பயன்படுத்த முயற்சித்தால் அதன் பலாபலன்களை அனுபவிக்கலாமன்ருே. வீட்டுக்கொரு விவிலயம் வைத்து, நாளுக்கொரு அதிகாரம் வாசிப்போம். நமது அன்ருட இன்ப துன்ப நிகழ்வுகளிலெல்லாம இறைவார்த்தைக்கு முன்னுரிமை கொடுப்போம். அப்போது இறைவார்த்தையில் வாழ்ந்தவர்களின் சரித்திரங்களை அல்ல, வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் அனுபவங்களைச் சந்திப்போம்.


பயன்படுத்திப்
பயன்பெறுவோம்.

### மரண ஞாபக விளம்பரம்

மரண ஞாபக விளம்பரங்களை முதல் தடவையாக எமது பத்திரிகையில் பிரசுரிக்கும்போது விளம்பரதாரர்களின் விருப்பத்திற்கமைய அவை அச்சிடப்படும். ஏற்கனவே எமது பத்திரிகையில் மரண ஞாபகம் வெளியிடப்பட்டிருப்பின் மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் விளம்பரம் செய்ய, நாம் விதிக்கும் கட்டுப்பாட்டுக்கமைய இறந்தவரின் பெயர், தினம், திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் இடம் என்பன மட்டுமே பாதுகாவலன் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் இடையூறுக்கு வருந்துகிருேம்,

(ஆ—ர்)

### நினைவஞ்சலி



நீ. ப. பேதுருப்பிள்ளை
(நவாலி புனித பேதுரு பாவிலு கோவில் சங்கிருஸ்தாம்)

" உம்முருவம் தான் எம்
எம் விழிகளில் இருந்து
மறைந்ததையா;
உம் நினைவுகள்
எம்மை மீட்குதையா;
உம் எழில்முகம்
காணத்தவிக்கின்ருேம்.
உம் ஆன்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்ருேம்."

துன்புறும்
மனைவி, மக்கள்.

A/286

### 5-ம் வருட நினைவு



சூசையப்பு அந்தோனிக் குருஸ்
(அருள்)

தாயின் மடியில்: 22-04-1944
இறைவனடியில்: 13-12 1984

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 13 12-1989 புதன் கிழமை புனித பரலோகமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி: ருேசா டயஸ்.
மக்கள்: காந்தி, ருெசிற்ரு, லடீஸ், டிலஸ், செல்வா.
மூள்விக்குளம்.

A/291

### 31ஆம் நாள் நினைவு

அந்தோனிப்பிள்ளை
ஜீவரெட்ணம்



மலர்வு 4-11-1932
உதிர்வு 9-11-1989

இரக்கமுள்ள மீட்பரே! நீர் அழைத்துக்கொண்ட எமது அன்பரின் ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியையும், எமக்கு ஆறுதலையுப் தந்தருள வேண்டுமென மன்ருடுகிருேம்.

அன்னரின் ஆத்மசாந்திக்காக சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் 9-12-89 சனிக்கிழமை காலை 6-30 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், தாயார், சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், மாமன், மாமி, உற்ருர், உறவினர்.
இராசாவின்தோட்டம் ருேட்,
யாழ்ப்பாணம்.

A/297

### 1-ம் வருட நினைவு



இறப்பியேல் இம்மானுவேல்
(இளைப்பாறிய ஆசிரியர்)

பிறப்பு: 13-3-1920
இறப்பு: 12-12-1988

உயிர்ப்பும், உயிரும் நானே,
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்

அன்னரின் ஆன்ம சாந்திக்காக 12 12-89 செவ்வாய்க்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளை.
61/1 கடற்கரை வீதி,
பாஷையூர்.

A/294

### 31-ம் நாள் அஞ்சலி



மலர்வு: 19-11-1920
உதிர்வு: 12-11-1989

திருமதி எலிசபெத்
அந்தோனிப்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியை)

உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்
அரு. 11-25

இரக்கமுள்ள யேசுவே! தேவரீர் எம்மிடமிருந்து அழைத்துக் கொண்ட எலிசபெத் அந்தோனிப்பிள்ளையை உமது இரக்கத்தினுல் அவரின் குறைகளை நிறைவு செய்து அவர் என்றும் ஆசித்த நித்திய வாழ்வை அவருக்கு அளித்தருளும்படி உமது திருப்பாடுகளின் பெயரால் உம்மைக் கெஞ்சி மலருடுகிருேம். ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 12-12-1989 செவ்வாய்க்கிழமை காலை 6-15 மணிக்கு கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி அன்னரது ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்ருடுமாறு வேண்டுகிருேம்.

இவரின் பிரிவால் துயருறும்
கணவன், மகன், சகோதரன்,
பெருமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
அன்னை வேளாங்கண்ணி வீதி,
கரம்பொன் தெற்கு
ஊர்காவற்றுறை.

A/296

### 1-ம் வருட ஞாபகம்



பிறப்பு: 1916-7-25
இறப்பு: 1988-11-28

யோ சந்தியாப்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர்)

இறைவனடி சேர்ந்த அடியானுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும். இவரின் நித்திய இளைப்பாற்றிக்காக மன்ருடுமாறு, உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்ருேம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சூசையப்பர் கோவிலடி,
அளவெட்டி.

A/99

## மரண ஞாபக அறிவித்தல்கள்

டிசம்பர் 9.

திருமதி. எஸ். டானியேல் அடைக்கலம்
(முன்னுள் செண். யேம்ஸ் மகளிர் கல்லூரி ஆசிரியை)
13ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி
யாழ். மரியன்னை பேராலயம் காலை 6-30 மணிக்கு A/295

டிசம்பர் 22.

ஆ சாள்ஸ் மத்தியுஸ்
2ஆம் ஆண்டு இரங்கல் திருப்பலி
மாதகல் புனித செபஸ்தியார் ஆலயம். காலை 6-15 மணி.
A/300

ரி. எவ். அந்தோனிமுத்து (முன்னுள் கிராம அதிகாரி)
15ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி
காவலூர் புனித அந்தோனியார் ஆலயம் காலை 6-15 மணி.
யாழ். அடைக்கல அன்னை ஆலயம் காலை 6-15 மணி A/293

## திருத்தந்தையின் கண்டனம்

திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் லெபனுன் ஜனதிபதி றெனமோவத்தின் கொலையை மிக வன்மையாகக் கண்டனம் செய் துள்ளார். லெபனுன் மக்கள் பழிவாங்கும் மனநிலையைக் கைவிட்டு நாட்டில் அமைதி உண்டாகப் பாடுபடவேண்டும் என்று கேட்டுள்ளார்.

பாதுகாவலன்
PATHUKAVALAN

# இறைவனின் எழுதுகோல்

புறக்கணிக்கப்பட்டோர், மரணத்தறுவாயிலுள்ளோர் மத்தியில் பணிபுரியும் அன்னைதிரேசா வறுமை ஒரு வகையான செல்வம், செல்வம் ஒரு வித வறுமை என்கிறார். (1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி: நீங்கள் ஒருவிதத்தில் ஒரு சமய சமூகப் பணியாளர் என்பதை மக்கள் அறிவார்கள். உங்களது பணியின் ஆன்மீக அடிப்படை அவர்களுக்கு விளங்குகின்றதா?

விடை: எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் வந்து ஏழைகளைத் தொட்டுணர அவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்கிறேன். அனைவரும் அதை உணரவேண்டும். இதற்காகவே எத்தனையோ இளைஞர்கள் அனைத்தையும் துறந்து வருகிறார்கள். உலகிலே இது நம்பமுடியாத ஒன்று. ஆனல் அற்புதமானது. எமது தொண்டர்கள் திரும்பிப்போகும்போது ஆட்களே மாறிவிடுகின்றனர்.

கேள்வி: நீங்கள் ஒரு பெண்ணாக இருப்பது உங்கள் செய்தியை மக்கள் விளங்கிக் கொள்வதற்குத் துணைபுரிகிறதா?

விடை: நான் அப்படி நினைக்கவில்லை.

கேள்வி: ஆனால் உலகம் ஓர் அன்னைக்குக் கூடிய ஆதரவு காட்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?

விடை: மக்கள் எனக்காக அல்ல, நாம் செய்வனவற்றுக்காகவே ஆதரவளிக்கின்றனர். முன்பெல்லாம் ஏழைகளைப்பற்றி மக்கள் அதிகம் பேசினார்கள். இப்போது மேலும், மேலும் மக்கள் ஏழைகளோடு பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். இது ஒரு பெரிய வேறுபாடு. எமது பணியின் விளைவு இது. தற்போது மிகுந்த ஏழைகள், புறக்கணிக்கப்பட்டோர், ஆதரவற்றோரின் பிரசன்னம் உணரப்படுகின்றது. முன்பெல்லாம் வீதியிற் கிடந்தோரை ஒருவரும் திரும்பிப்பார்க்கவில்லை. கல்கத்தா நகர வீதிகளிலிருந்து 54000 பேரை நாம் மீட்டோம். அந்த ஒரே அறையில் சுமார் 23,000 பேர் மரணித்துள்ளனர்.

கேள்வி: தாங்கள் தாழ்நிலையில் இருந்தாலும், உலகில் இறைவனின் அருளுக்கு ஒரு கருவியாக விளங்குவது மாபெரும் காரியமல்லவா?

விடை: ஆனல் அது அவருடைய வேலைதானே. ஒன்றுமில்லாமையைப் பயன்படுத்துவதன்மூலம் இறைவன் தமது மகத்துவத்தைக் காட்ட விரும்புகிறார் என்றே நினைக்கிறேன்.

கேள்வி: உங்களிடம் விசேட தகைமைகள் உள்ளதாக நீங்கள் கருதவில்லையா?

விடை: நான் அப்படி நினைக்கவில்லை. இது இறைவனின் வேலை. இதில் எனக்கு ஒரு உரிமையுமில்லை. அவரது கரத்தில் நான் ஒரு சிறிய எழுதுகோலாக இருக்கிறேன். அவ்வளவு தான். நினைப்பதும் அவரே, எழுதுவதும் அவரே. எழுதுகோலுக்குப் பயன்படுத்தப்படுவதைத் தவிர வேறொன்றுமில்லை. மனிதரீதியில் பார்த்தால், எமது வேலைக்கு இந்த வெற்றி கிடைத்திருக்க முடியாது அல்லவா?

கேள்வி: இறைவன் உங்களுக்கு அளித்த மாபெரும் கொடை என்ன?

விடை: ஏழை மக்கள்.

கேள்வி: அவர்கள் எவ்வாறு ஒரு கொடையாக முடியும்?

விடை: 24 மணிநேரமும் இயேசுவோடிருக்க அது எனக்கு வாய்ப்பளிக்கிறது.

கேள்வி: இங்கு கல்கத்தாவில் மெய்யான ஒரு மாற்றத்தை உண்டாக்கியிருக்கிறீர்களா?

விடை: ஆமென்று நினைக்கிறேன். மக்கள் ஏழைகளின் பிரசன்னத்தை உணர்ந்திருக்கின்றனர். எத்தனை எத்தனையோ இந்து மக்கள் எம்மோடு ஒத்துழைக்கின்றனர். இப்போது வீதிகளில் சாகக்கிடக்கும் எவரையாவது காண்பதரிது. உலகரீதியில் அது ஏழைகளின் பிரசன்னத்தை உணர்த்தியுள்ளது.

கேள்வி: ஏழைகளின் பிரசன்னத்தை உலகுக்கு உணர்த்தியது மட்டுமல்லாமல், ஏழைகளோடு எவ்வாறு பணிசெய்வது என்பது பற்றிய ஏதாவது செய்தியை அளித்திருக்கிறீர்களா?

விடை: தம்மைப் பிறர் நேசிக்கிறார்கள், விரும்புகிறார்கள் என்பதை அவர்கள் உணரச் செய்யவேண்டும். எனக்கு அவர்களே இயேசு. அவர்களுக்காகப் பெருங்காரியங்களைச் செய்வதைவிட இதுதான் முக்கியம் எனக் கருதுகிறேன்.

கேள்வி: இந்த மாபெரும் இந்து சமுதாயத்தில் உங்களது பணி காரணமாக ஏராளமான மனந்திரும்புதல்கள் ஏற்படாதது உங்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளதாக உங்களது நண்பர்கள் கூறுகிறார்களே.

விடை: மறைபோதகர் அவ்வாறு நினைப்பதில்லை. இறைவனின் வார்த்தையை அறிவிப்பதே அவர்களது எண்ணம். தொகை அவர்களுக்கு முக்கியமல்ல. ஆனல் மக்கள் செய்தியை செயலில் காட்டுகிறார்கள். மக்களுக்கு வந்து பணிபுரிகிறார்கள். பெரிய மனந்திரும்புதல் இல்லாமலிருக்கலாம். ஆனல் ஆத்துமத்தில் என்ன நடக்கிறதென்று யாருக்குத் தெரியும்?

கேள்வி: இந்து மதத்தைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

விடை: எல்லாச் சமயங்களையும் நான் விரும்புகிறேன் ஆனல் எனது மதத்தில் ஒரு பற்று உண்டு.

கேள்வி: அவர்களும் யேசுவை நேசிக்க வேண்டுமா?

விடை: ஆம். சமாதானம் வேண்டுமானல், மகிழ்ச்சி வேண்டுமானல் அவர்கள் யேசுவைக் காண வேண்டும். எமது அன்புச் செயல்கள் காரணமாக, சிறந்த இந்துக்களாகவோ, சிறந்த முஸ்லீம்களாகவோ, சிறந்த பௌத்தராகவோ அவர்கள் ஆகும்போது அங்கு வேறொன்றும் வளர்ந்து வருகின்றது. அவர்கள் இறைவனை நெருங்கி வருகின்றனர். அண்மையில் வரும்போது அவர்களுக்கு தெரிந்தெடுக்க வேண்டிய அவசியம் உண்டாகிறது.

கேள்வி: நீங்களும் திருத்தந்தை 2ஆம் அருள்சின்னப்பரும், பிறதிருச்சபைத் தலைவர்களும் மேற்கத்திய வாழ்க்கை முறையையும், உலோகாயதத்தையும், கருச்சிதைவையும் கண்டித்திருக்கிறீர்கள். எந்த அளவுக்கு இது உங்களுக்கு அச்சத்தைத் தந்துள்ளது?

விடை: நான் எப்பொழுதும் சொல்வது என்னவென்றல், ஒரு தாய் தனது பிள்ளையைக் கொல்வாளானல், மேற்குலகில் இன்னும் அழிப்பதற்கு என்ன இருக்கிறது? இதை விளக்குவது கடினம். ஆனல் இதுதான் உண்மை.

கேள்வி: மேற்கின் உலகாயதமும் இதுபோன்று காத்திரமான பிரச்சினையா?

விடை: எனக்குத் தெரியாது. எனக்கு சிந்திப்பதற்கு எத்தனையோ விடயங்கள் உண்டு. இது பற்றி அதிகம் செபிக்கிறேன். ஆனல் அதைப்பற்றியே நினைத்துக் கொண்டிருப்பதில்லை. எங்கள் சபையை எடுத்துக் கொள்ளுங்கள். எங்களிடம் உள்ளது சொற்பம். ஆகவே முன்னீடுபாடு கொள்வதற்கு எதுவும் இல்லை. எவ்வளவு அதிகமாக உள்ளதோ அவ்வளவுக்கு அதில் பற்றும் உண்டு. கொடுப்பது குறைவாகவேயிருக்கும். ஆனல் உடைமைகள் குறைவாக இருந்தால் உங்களுக்கு கூடிய சுதந்திரம் இருக்கும். ஆகவே வறுமை எமக்கு ஒரு சுதந்திரம். இங்கு தொலைக்காட்சியில்லை, அதில்லை, இதில்லை. முழு இல்லத்திலும் இந்த ஒரு மின்விசிறிதான் உண்டு, இது விருந்தினருக்கு எவ்வளவு வெப்பமாக இருந்தாலும் பரவாயில்லை. நாம் மகிழ்ச்சியாக இருக்கிறோம்.

கேள்வி: செல்வந்தரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

விடை: செல்வந்தரை வறியவர்களாகக் காண்கிறேன். சில சமயங்களில் அவர்கள் தனிமையை அனுபவிக்கிறார்கள். அவர்களுக்கு வேறெதாவது தேவைப்பட்டுக் கொண்டிருக்கும். எல்லாரும் அப்படி என்று நான் சொல்லவில்லை. இத்தகைய வறுமையை அகற்றுவது கடினம். உணவு இல்லாதபசியை அகற்றுவதைவிட அன்பில்லாத பசியை அகற்றுவது கடினம்.

கேள்வி: நீங்களும், உங்களது கன்னியரும் வாழ்கின்ற மிகுந்த கட்டுப்பாடான முறைபற்றி சில கண்டனங்கள் எழுந்துள்ளன.

விடை: நாங்கள் அதைத் தேர்ந்தெடுத்தோம், ஏழைகளுக்கும் எமக்கும் அதுதான் வித்தியாசம். இது ஏழைகளை நெருங்கிவர எமக்கு உதவுகிறது. நாம் வித்தியாசமாக வாழ்ந்தால் அவர்களுக்கு எவ்வாறு உண்மையாக நடந்துகொள்ள முடியும்? பணத்தால் வாங்கக்கூடிய எல்லாவற்றையும் நாம் வைத்திருந்தால் ஏழைகளோடு எமக்கென்ன தொடர்பு? அவர்களோடு நான் எந்த மொழியில் பேசலாம்? இப்போது யாராவது மிக வெப்பமாயிருக்கிறது என்று சொன்னல், எனது அறையை வந்து பாருங்கள் என்று சொல்லக்கூடியதாயிருக்கிறது.

கேள்வி: நீங்கள் தரிசித்த மிக மகிழ்ச்சியான இடம் எது?

விடை: கலிகட். மக்கள் சமாதானத்தில், இறையன்பில் மரிக்கும்போது, அது மிக அற்புதமானது. எமது மக்கள் தமது குடும்பங்களோடு சந்தோஷமாக இருப்பதைக் காணும் போது, எவ்வளவு அழகாயிருக்கிறது. ஏழைமக்களின் மகிழ்ச்சி தெளிவானது, பரிசுத்தமானது உண்மை ஏழைகளுக்குத்தான் அந்த மகிழ்ச்சி தெரியும்.

கேள்வி: ஏழைகள் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள் என்பது ஒரு பொய்த்தோற்றமென்றும், அவர்களுக்கு இருப்பிட வசதிகள் கொடுத்து உயர்த்த வேண்டுமென்றும் சிலர் கூறுகிறார்களே.

விடை: உலகப் பொருட்கள்தான் மகிழ்ச்சியைக் கொடுப்பன என்பதில்லை. அதைவிட மேலான ஒன்று, உள்ளத்தில் ஆழ்ந்த சமாதான உணர்வு ஒன்று உண்டு. அவர்கள் திருப்தியுடன் இருக்கிறார்கள். இதுதான் ஏழைகளுக்கும், செல்வந்தருக்குமுள்ள பெரும் வேறுபாடு.

கேள்வி: உங்களுடன் உழைப்பவர்கள் உங்களைத் தடுத்து நிறுத்தவே முடியாதென்றும், விரும்பியதை எப்போதும் அடைந்து விடுகிறீர்கள் என்றும் கூறுகிறார்கள்.

விடை: அது சரிதான். எல்லாம் இயேசுவுக்காக.

கேள்வி: எதிர்காலத்தைப்பற்றி உங்கள் திட்டங்கள் என்ன?

விடை: நான் ஒரு நாளைமட்டும் நினைக்கிறேன். நேற்றைய தினம் போய்விட்டது. நாளையதினம் இன்னும் வரவில்லை. இயேசுவை அன்புசெய்ய எமக்கு இன்றுமட்டுமே இருக்கிறது.

கேள்வி: சபையின் எதிர்காலம்?

விடை: அது அவர் கையில்.

## பெறவும் கொடுக்கவும்

தபால் மூலம் ''பாதுகாவலன்'' தனிப்பிரதி பெறுபவர்கள் ரூபா. 150/- செலுத்தி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள். சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கு 1990 இல் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

முகவர்கள் மூலம் பத்திரிகை பெற விரும்பாதவர்கள் ஆண்டு சந்தா ரூபா. 150/- செலுத்தி தபால் மூலம் தனிப்பிரதியைப் பெற்றுக்கொள்ளலாம். வெளிநாடுகளுக்கு வாராவாரம் வான் கடிதம் மூலம் அனுப்ப ஆண்டு சந்தா ரூபா 950/- மட்டுமே.

புத்தாண்டு நன்கொடையாக பாதுகாவலன் ஆண்டு சந்தாவை உங்கள் நண்பர்களுக்குக் கொடுங்கள். பயனுள்ள கொடை இது. நன்கொடையாளர் பெயர், ஆண்டு முழுவதும் நண்பருக்கு அறிவிக்கப்படும்.

சந்தாவை காசோலை, தபால் கட்டளை அல்லது காசுக் கட்டளையாக நிர்வாக ஆசிரியர், பாதுகாவலன், அ. பெ. இல 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## புதிய அரசியல் கண்ணோட்டம்

சென்றவாரம் ரஷ்ய ஜனதிபதி மிக்கேல் கொர்பச்சேவ் தனது வத்திக்கான் பயணத்தின்மூலம் உலக வரலாற்றை மாற்றி அமைத்துள்ளார். கொர்பச்சேவின் சிறந்த பயணம் புதிய சீர்திருத்தங்களை உண்மையிலேயே வியப்படைய வைக்கின்றன. கம்யூனிசம் மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்தும் என்று திடமாக நம்பும் கொர்பச்சேவ், மதம் மனிதனின் ஆன்மீக வாழ்வை மேம்படுத்தும் என்பதைப் புரிந்து கொண்டுள்ளார்.

ரஷ்யக் கம்யூனிசியக் கட்சியின் பிரமுகர் ஒருவர் வத்திக்கானில் நடந்த திருத்தந்தை, ரஷ்ய ஜனதிபதி ஆகியோரின் சந்திப்புப் பற்றிக் குறிப்பிடுகையில் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரின் புதிய கத்தோலிக்க சிந்தனையும், ரஷ்யாவின் புதிய அரசியல் கண்ணோட்டமும் இணைந்தே இந்தச் சந்திப்பு ஏற்படக் காரணமாய் இருந்தன என்றும் மாக்சியத்தையும், முதலாளித்துவத்தையும் பற்றித் திருந்தந்தை கொண்டிருக்கும் சமமான கண்ணோட்டமே குறிப்பாக இந்தச் சந்திப்பைத் திட்டமிடுவதற்குத் துணையாயிருந்தது என்றும் அவர் கூறியுள்ளார்.

## மாணவர் பயிற்சிப் பாசறை

பாஷையூர் பீடப்பணியாளர் சபை மாதந்தோறும் மாணவர் பயிற்சிப் பாசறை ஒன்றை ஆரம்பித்துள்ளது. இதில் தேர்ச்சி பெற்றவர்கள் பலரை மாதமொருமுறை அழைத்து பாடசாலை மாணவர்களுக்கு கல்வி, ஒழுக்கம், வாழ்க்கைத்தேர்வு, தலைமைத்துவம், சமூகக்கடமை, சமூக ஒழுங்கு ஆகியவைபற்றிய கருத்தரங்கும், பயிற்சியும் அளிக்கப்படும். இதற்கான ஒழுங்குகளைப் பாஷையூர் பங்குத் தந்தை அருள்திரு. J. A. பிரான்சிஸ் ஒழுங்கு செய்துள்ளார். எதிர்காலத்தில் பொறுப்புணர்வு வாய்ந்த பொதுநிலையினரை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

## பாராட்டு

வத்திக்கானில் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள யூகொஸ்லேவிய தூதுவர் திரு. அல்விகா மஸ்ருகோவை முறைப்படி ஏற்றுக்கொள்ளும் நிகழ்ச்சியில் திருத்தந்தை 2-ம் அருள் சின்னப்பர் கலந்து கொண்டுபேசுகையில் யூகொஸ்லேவியாக் கம்யூனிசிய அரசு மதச் சுதந்திரத்தை மதித்து வருவதைப் பாராட்டினர்.

## இலவசம்

இந்த ஆண்டு வெளிவந்த பாதுகாவலன் பத்திரிகைகளைச் சேர்த்து வைத்திருப்பவர்கள் அவற்றை எமது அச்சகத்திற்குக் கொண்டு வந்து இலவசமாக ஒரு புத்தகமாக கட்டிச் செல்லலாம். அடுத்த ஆண்டும் அவ்வாறே. (ஆ—ர்)

இப்பத்திரிகை திரு. நிக்கலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு மார்கழி மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QR/160/88/81

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்